பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 26 புதன்கிழமை 10.05.2023 கதிர் 181

### பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு

# ஐ.நாவும் எதிர்ப்பு

## சிறப்பு அறிக்கையாளர்கள் ரணிலுக்குக் கடிதம்

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தைக் கொண்டுவருவதன் மூலம் பயங்கரவாதத்தை செயற்திறன் மிக்கவகையில் கட்டுப்படுத்த முடியாது என்று ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் குழுவினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்விடத்தில் வலியுறுத்தியுள்ளனர்.

மனித உரிமைகளையும் அடிப்படை சுதந்திரத்தை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல் தொடர்பான ஐ.நா விசேட அறிக்கையாளர் ஃபியோனுவலா நி ஆலெய்ன், தன்னிச்சையான தடுப்புக்காவல் தொடர்பான ஐ.நா நடவடிக்கைக்குழுவின் பிரதித்தலைவர் மெத்தியூ கிலெற், வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான ஐ.நா நடவடிக்கைக்குழுவின் தலைமை அறிக்கையாளர் ஓவா பால்டி, கருத்து வெளிப்பாட்டுச்சுதந்திரத்தைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல் தொடர்பான ஐ.நா விசேட அறிக்கையாளர் ஐரின் கான், அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமை தொடர்பான ஐ.நா. விசேட அறிக்கையாளர் கிளெமென்ற் நியலெற்சொஸி வோல், மனித உரிமைகள் பாதுகாவலர்களின் நிலை தொடர்பான ஐ.நா விசேட அறிக்கையாளர் மேரி லோலொர், நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளின் சுதந்திரம் தொடர்பான ஐ.நா விசேட அறிக்கையாளர் மார்க்ரெட் சற்றெர்த்வெய்ட், சிறுபான்மையின விவகாரங்கள் தொடர்பான ஐ.நா. விசேட அறிக்கையாளர் பெர்னாண்ட் டி வெரென்ஸ், மத மற்றும் நம்பிக்கைகள்சார் சுதந்திரம் தொடர்பான ஐ.நா விசேட அறிக்கையாளர் நஸிலா கனேயா, சித்திரவதைகள் மற்றும் ஏனைய மனிதாபிமற்ற தண்டனைகள் தொடர்பான ஐ.நா விசேட அறிக்கையாளர் ஏலிஸ் ஜில் எட்வார்ட்ஸ் ஆகிய 10 பேர் கூட்டாக இணைந்து உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளனர்.

☞2

### இது ரகசியம் அல்ல!

மீண்டும் அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுக்கள் பற்றிய கதை அடிபடத் தொடங்கியிருக்கிறது. அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ் அரசுக் கட்சிப் பிரதிநிதிகள் நேற்றுச் சந்தித்துப் பேசியிருக்கினம். 2002 முதல் கடந்த 20 வருடங்களாக ரணிலும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முயற்சிக்கிறார் ஆனால் ஒரு புல்லையும் புடுங்கிப் போடக் காணேல்ல. இப்ப மற்றொரு சுற்றுத் தொடங்கியிருக்கு. தமிழ்த் தலைவர்களுக்கு ஒன்றில் அவர் கூப்பிடும் போதெல்லாம் பேச்சுக்குப் போவது இல்லையென்றால் எதிர்ப்பது ஆகிய இரண்டு தெரிவுகள் மட்டும்தான் என்பதால் அவர்கள் ஒருங்கே இந்த இரண்டையும் செய்துகொண்டிருக்கிறார்கள். அதாவது சிலர் பேச்சுக்குப் போவார்கள். சிலர்

☞2

### சுகாதாரப் பணிப்பாளருக்கு வடக்கிலிருந்து இடம்மாற்றம்

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் லியனகே உடன் அமுலிற்கு வரும் வகையில் மத்திய சுகாதார அமைச்சிற்கு இடமாற்றப்பட்டார்.

அவர் கொழும்பு சுகாதார அமைச்சில் தனியார் மருத்துவமனைக் கண்காணிப்புப் பிரிவின் பிரதிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ள்ளார்.

அரச நிர்வாக அதிகாரியான அவர், அரசியல் ரீதியாக யாழ்ப்பாணத்தில் தலையீடுகளை மேற்கொண்டதை அடுத்தே இடம்மாற்றப்பட்டார் என்று கூறப்படுகின்றது. எனினும் ஆது குறித்து உத்தியோகபூர்வமான தகவல்கள் எதுவும் இல்லை.

யாழ். நகையொட்டியுள்ள பண்ணை சுற்றுவட்ட வீதியில் நாகபூசணி அம்மன் சிலை வைக்கப்பட்டபோது இவரது தலையீட்டின் காரணமாகவே பொலிஸார் அந்தச் சிலைக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கச் செய்தார்கள் என்கிற சர்ச்சை எழுந்திருந்தது. இந்த விமர்சணம் எழுந்த

☞2

# முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கலால் குடாநாட்டில் நேற்று உணர்வுபூர்வம்





இறுதிப் போர் மற்றும் தமிழ் இனப்படுகொலை தொடர்பான நினைவாக யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் இடம்பெற்றது.

வல்வெட்டித்துறையில் தலைவர் பிரபாகரன் பிறந்து வளர்ந்த வீட்டின் முன்பாக முதலாவது கஞ்சி வழங்கும் நிகழ்வு தொடங்கப்பட்டது.

2009ஆம் ஆண்டு முல்லைத்தீவில் இறுதிப் போர் நடந்து கொண்டிருந்தபோது, கொழும்பு ஆட்சியாளர்கள் போருக்குள் சிக்கியிருந்த மக்களுக்கான உணவுப் பொருட்களை அனுப்புவதை கடுமையாக மட்டுப்படுத்தியது. மூன்று லட்சம் மக் கள் போர்ப் பகுதிக்குள் சிக்கிக் கொண்டிருந்தபோதும் அதில் 10 முதல் 20 வீதமான மக்களுக்குப்போதுமான உணவு மட்டுமே கொழும்பால் அனுப்பப்பட்டது.

இந்த நிலையில் வன்னியில் விளைவிக்கப்பட்ட அரசியைக்கொண்டும் அங்கேயே கிடைத்த தேங்காய்களைக் கொண்டும் காய்ச்சப்பட்ட கஞ்சியே பெரும்பாலான மக்களுக்கு மூன்று

☞2

### நாளை உடனடிப் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு

# மே 12 அதிகாரப் பகிர்வு குறித்து நேரடிப் பேச்சு

## ரணிலுடனான தமிழ் அரசுக் கட்சி சந்திப்பில் முடிவு

அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் வடக்கு கிழக்குத் தமிழ் நாடாளுமன்றஉறுப்பினர்கள்நாளையும் மறுநாளும் நடத்தவுள்ள பேச்சுக்களில் உடனடிப் பிரச்சினைகள் குறித்து முதல் நாளிலும் அரசியல் தீர்வு தொடர்பில் மறு நாளிலும் பேசுவது என்று தமிழ் அரசுக் கட்சிக்கும் அரசுத் தலைவருக்கும் இடையில் செவ்வாய்க்கிழமை நடந்த சந்திப்பில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

☞2

# ரணிலின் சந்திப்பு முடிந்த கையோடு இந்திய தூதுவருக்கு உடனடி அப்டேட்

## வழங்கியது தமிழ் அரசுக் கட்சி

(ந.லோகதயாளன்)

அரசியல்தீர்வுதொடர்பில் அரசுத்தலைவருக்கும் தமிழ் அரசுக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கும் இடையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பேச்சுக்கள் முடிந்தகையோடு தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் உள்ளிட்ட மூவர் அடங்கிய குழு அது குறித்து உடனடியாகவே இந்தியத் தூதுவரைச் சந்தித்துக் கலந்துரையாடியது.

இந்தியத் தூதுவர் கோபால் பாக்கிலேயுடன் கொழும்பில் உள்ள சொகுசு விடுதி ஒன்றில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

ரணில் விக்கிரமசிங்காவுடனான சந்திப்பு

☞2

### அரச நிதிக் குழுவின் தற்காலிக தலைவராக

# ஜோன்டனின் நியமனத்துக்கு எதிர்க் கட்சிகள் கடும் எதிர்ப்பு

அரச நிதி தொடர்பான தெரிவுக்குழுவின் தற்காலிகத் தலைவராக ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவை நியமித்தமைக்கு ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் எதிர்தரப்பு உறுப்பினர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

ஶ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் உறுப்பினர் என்ற வகையில் சபாநாயகர் செயற்படக்கூடாது. நாடாளுமன்றநிலையியற்கட்டளைக்கு அமையசுயாதீனமாகச்செயற்படவேண்டுமென எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையில் வலியுறுத்தினார்கள்.

சபாநாயகர் தலைமையில் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்ற அமர்வு இடம்பெற்றபோது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மேற்கண்டவாறு உரையாற்றினார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

நாடாளுமனறக் கூட்டத்தொடர் தொடங்கப்பட்டு இரண்டு மாதங்கள் நிறைவடைந்த பின்னர் அரச நிதி தொடர்பான

☞2

### சமூக பாதுகாப்புத் திட்டத்திற்கு

# 200 மில்லியன் டொலர் தர உலக வங்கி உடன்பட்டது

சமூகத்தில் கடும் நெருக் கடிகளுக்கு ஆளாகக் கூடியவர்களைப் பாதுகாப்பதற்காகப் பலம் வாய்ந்த சமூகப் பாதுகாப்பு வலையமைப்பொன்றை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான படிமுறைகளை மேற்கொள்வது சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன்வசதி நிகழ்ச்சித் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள செயற்பாடுகளில் முதன்மையான செயற்பாடாக அடையாளங் காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, திட்டமிடப்பட்டுள்ள சமூகப் பாதுகாப்புக் கருத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக 200மில்லியன்டொலர்கடன் வழங்குவதற்கு உலக வங்கி உடன்பாடு தெரிவித்துள்ளது.


இலக்காகக் கொள்ளப் பட்டகுடும்பங்களுக்குநிதிநிவாரணம் வழங்கல், வறுமை மற்றும் இடர்களால் பாதிக்கப்படுகின்ற வாய்ப்புக்களை மேம்படுத்துகின்றமுன்னோடி வேலைத் திட்டம் மற்றும் சமூகப்பாதுகாப்பு முறைமையைப் பலப்படுத்தல் போன்ற மூன்று கூறுகளின் கீழ் உத்தேசக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவும்,

☞2

### 18 வயது இளைஞன் யாழ். நகரில் கைது

#### போலி நாணயம் அச்சிடும் இயந்திரமும் கைப்பற்றல்



போலி நாணயத்தாள்களை அச்சிடும் மின் இயந்திரத்துடன் 18 வயது இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு

☞2

# சஹ்ரான் அலைபேசி பற்றி எழுந்துள்ள புதிய சர்ச்சை

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய முதன்மைச் சந்தேகநபரான சஹ்ரான் ஹாசீமின் அலைபேசிப்பாகங்கள் வெளிநாடுகளின் புலனாய்வுப் பிரிவுக்கும், பொலிஸாருக்கும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றமை தொடர்பில் பாதுகாப்புச் சபையின் கவனத்துக்குக்கொண்டு செல்வதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு செவ்வாய்க்கிழமை அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. அங்கு செய்தியாளர்களிடம் அமைச்சர் இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இது தொடர்பில் இந்த ஆட்சி தெரிந்துவைத்துள்ளதா இல்லையா என்பது தொடர்பில் எமக்குத் தெரியவில்லை. அது தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடப்படவில்லை. எனினும் இவை தொடர்பில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மற்றும் பாதுகாப்புசபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் அமைச்சர்கள் உள்ளிட்ட தரப்பினரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்படும் - என்றார்.

### வடக்கு - கிழக்கு மாகாணங்களில்

# பௌத்த சின்னங்களை அழித்து அதன் மீது சிவலிங்கம் சிங்களவர்களின் பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு




## சரத்வீரசேகர எம்.பி. நாடாளுமன்றத்தில் எச்சரிக்கை

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்த சின்னங்கள் அழிக்கப்பட்டு அதன் மீது சிவலிங்கம், விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்படுகின்றன. ஆகவே சிங்களவர்களின் பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு, பொறுமையை சோதிக்க வேண்டாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அட்மிரல் சரத் வீரசேகர சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின்கட்டளைகள்மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை சிங்கள பௌத்த நாடு என்பதற்கு வரலாற்று ரீதியில் பல சான்றுகள் உள்ளன. பௌத்த தொல்பொருள் சின்னங்கள் நாடு முழுவதும்காணப்படுகின்றன. ஆகவே பௌத்த மத உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இலங்கையில் வாழும் அனைவருக்கும் உண்டு.

வடக்கு மற்றும்

☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அதனை எதிர்த்துக்கொண்டு நாங்கள்தான் சுத்தத் தேசிய வாதிகள் என்று சொல்லிக்கொண்டிருப்பார்கள். அவர்களின் இந்த அரசியல் அணுகுமுறைகளால் தமிழ் மக்களுக்குத் தீர்வு வந்து விழுகிறதோ இல்லையோ இருபக்கத்து தமிழ் அரசியல் வாதிகளுக்கும் வாக்கு மட்டும் வந்து விழுந்து விடுகின்றது.

பேச்சுக்குப் போனாலும் பேச்சை எதிர்த்தாலும் அதனூடாகஏதாவதொன்றுசின்னதாக நடந்துவிட்டாலும் அது எங்களால்தான்நடந்ததுஎன்று உரிமை கொண்டாடுவதில் மட்டும் தமிழ் அரசியல்வாதிகளுக்குள் அசைக்க முடியாத ஒற்றுமைஉண்டு. நேற்றைய பேச்சைத் தொடர்ந்தும் இந்த ஊரிமை கோரல் பிரச்சினை கிளம்பியிருக்கிறது. யார் சொல்லி கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பேச்சில் இணைத்துக்கொண்டார் ரணில்விக்கிரமசிங்க என்பது தான் அந்தச் சர்ச்சை.

ஜனாதிபதி செயலகத்தில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு அழைப்பெடுத்த ரணிலின் செயலாளர்களில் ஒருவர், வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பு மே 11,12,13 நடப்பதற்கு முன்னர் மே 9 கூட்டமைப்பினரைச் சந்திக்கஜனாதிபதிவிரும்புகின்றார் என்று தெரிவித்திருக்கிறார். கூட்டமைப்பு என்றால் எந்தக் கூட்டமைப்பு என்ற சாரப் பட உடனே சுமந்திரன் திருப்பிக் கேட்டுள்ளார். ''கூட்டமைப்பினரை சந்திப்புக்கு வரச் சொல்லி சுமந்திரனிடம் தகவல் சொல்லுங்கள் என்று அவர் தெரிவித்தார்'' என்று செயலாளர் பதிலளித்துள்ளார். இதையடுத்துஇந்தவிவரத்தை தலைவர் சம்பந்தனிடம் தெரிவித்தார் சுமந்திரன், அவர் எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அதனை அறிவிக்கும்படி சொன்னார். அதன்படி தமிழ் அரசுக் கட்சி (புலிகள் அங்கீகரித்த பழையகூட்டமைப்பு)நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வட்ஸ்அப் குழுவில் இந்தச் சந்திப்புக் குறித்த தகவலைப் பகிர்ந்தார் சுமந்திரன்.

அந்தத் தகவல் பகிரப் பட்டதைத் தொடர்ந்து சந்திப்புக்குப் போகிறீர்களா என்று ஜனநாயகக் கூட்டணியின் தலைவர்களான முன்னாள் கூட்டமைப்பு உறுப்பினர்களைக் கேட்டபோது நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனைத் தவிர மற்றவர்கள் அது பற்றி ஜனாதிபதி செயலகத்தால் தங்களுக்கு எதுவும் தகவல் தரப்படவில்லை என்பதாகப் பதலளித்துவிட்டார்கள். செல்வம் மட்டும் அப்படியொரு அழைப்பு சுமந்திரனால் விடுக்கப்பட்டிருக்கிறதுதான் என்றுமென்று விழுங்கினார்.

இதற்கிடையில் மே 11,12,13 சந்திப்புக்கு கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களையும்அழைத்தால் மட்டுமே பேச்சுக்குச் செல்லலாம் என்று செல்வம் ஓர் அறிக்கைவிட்டார். அது ஊடகங்களில் பெரிதாக எடுபடவில்லை என்பதால் மறுநாள் ஒரு செய்தியாளர் சந்திப்பு நடத்தி அதனையே அறிவித்தார். மறுநாள் நடந்த ஜனநாயகக் கூட்டணித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த விவகாரமும் விவாதிக்கப்பட்டு கிழக்கை தவிர்த்துப் பேச்சுக்குக் கூப்பிட்டால் அதனை நிராகரிப்பது என்கிற செல்வத்தாரின் முன்கூட்டிய முடிவைக்கூட்டணித்தலைவர்களும் வழிமொழிந்தார்கள்.

இதுபோன்ற விடயங்களைக் கூட்டமைப்புக்குள் சுமந்திரன் செய்தபோது அவர் கட்சியிலுள்ள மற்றைய தலைவர்களைக் கலந்தாலோசிக்காமல் தன்னிச்சையாகச்செயற்படுகிறார்கள் என்று குற்றஞ்சாட்டிய சுரேஸ்பிரமேச்சந்திரன், சித்தார்த்தன், சிறிகாந்தாபோன்றவர்கள்செல்வத்துக்குஎதிராகஅப்படியொரு குற்றச்சாட்டையும் அந்தக் கூட்டத்தில் முன்வைக்கவில்லை. செல்வமும்ரெலோவும் ஜனநாயகக் கூட்டணிக்குள் சுமந்திரனதும் தமிழ் அரசுக் கட்சியினதும் பாணியைப்பின்பற்றுவதாகத் தெரிந்தாலும் அதை விமர்சிப்பதற்கு இன்னும் கொஞ்சம் காலம் இருக்கிறது என்று மற்றைய தலைவர்கள் யோசித்தார்களோஎன்னவோ அவர்கள் அதுபற்றி வாயைத் திறக்கவில்லை. ஜனநாயகக் கூட்டணியை ஒரு கட்சியாகப் பதிந்துவிட்டால் இதுபோன்ற பிரச்சினைகளைத் தீர்த்து விடலாம்என்கிறஎண்ணமும் அவர்கள் செல்வத்துக்கு எதிராகக்குரல்எழுப்பாததற்குக் காரணமாக இருக்கலாம்.

ஆனால் பிரச்சினை அதுவல்ல. இப்படிச்செல்வம் கிழக்கு மாகாணப் பிரச்சினையைக் கிளப்ப, அதற்குள் புகுந்து ஒரு பெரிய 'சிக்ஸர்' அடித்துவிட்டது தமிழ் அரசுக் கட்சி. செல்வம் கிளப்பிய கிழக்குப் பிரச்சினை நியாயமானதுதான் என்பதால் ஊடகங்களும், ஆதீனங்களும் வேறு சில பொதுஅமைப்புக்கள்,அரசியல் கட்சிகளும்கூடஅதற்குஆதரவு தெரிவித்தன. இதனால் பேச்சுக்குச்செல்வதற்கு முதல் நாள், அதாவது மே 8 மாலை சம்பந்தரின் வீட்டில் சந்தித்துப் பேசியதமிழ்அரசுக்கட்சியினர் கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பேச்சில்இணைத்துக்கொள்ள வேண்டும் என்பதை ஒரு அறிக்கையில் மேதாவித்தனமான வார்த்தைகளில் வெளிப்படுத்தினர். அதாவது ஜனநாயகக்கூட்டணியினரைப் போன்று நேரடியாகச் சொல்லாமல், வடக்குகிழக்கு சேர்ந்த ஒரு விடயத்தை மட்டுமே தாங்கள் அங்கீகரிப்பார்கள் என்பதாக தலையைச் சுற்றி மூக்கைத் தொட்டார்கள்.

இப்படியாக இந்த விவகாரம் தமிழ் அரசியல் பரப்பில் பரபரப்பை ஏற்படுத்த ஜனாதிபதியின் மூத்த ஆலோசகர் சாகல சில தரப்புக்கள் மூலமாக இவர்கள் என்னதான் சொல்கிறார்கள் என்பதை மோப்பம் பிடித்துள்ளார். ''வட்இஸ் தெயார் டிமான்ட்'' (அவர்களின் தேவைதான் என்ன?) என்று சாகல நாடி பிடித்தறிந்திருக்கிறார். இது மே 8 நள்ளிரவுக்குச் சமீபமாகநடந்திருக்கிறது. மறுநாள் பிற்பகல் அதாவது மே 9 ஜனாதிபதி செயலகத்தில் தமிழ் அரசுக் கட்சியினர் இந்தக் கிழக்கு விவகாரத்தைக் கையில் எடுத்தபோது ரணில் அதைப் பற்றிப் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. சில விநாடிகள் அமைதிக்குப் பிறகு அப்படியே செய்யலாம், அவர்களையும்அழைப்போம் என்று அந்தப் பிரச்சினையை முடித்துவிட்டார். செவ்வாய்க் கிழமை காலையே சாகல இவர்களின் திட்டத்தைப் பற்றியும்இவர்கள்எப்படியும்கிழக்கு விசயத்தைத் தூக்குவார்கள் என்றும் ரணிலை 'அலேட்' செய்திருப்பார் போலும், அதனால் ரணில் அது பற்றிப் பெரிதாக எந்தக் கதையும் கதைக்கவில்லை. தமிழ் அரசுக் கட்சியினர் கேட்டார்கள் அவர் ஓம் என்று சொன்னார் என்பதற்கு அப்பால் அந்த விவகாரம் எடுபடவில்லை.

காகம்இருக்கப்பனம்பழம் விழுந்த கதையாக, மே 9 சந்திப்பின் பெறுபேறாக கிழக்கையும் பேச்சில் இணைத் துக்கொள்ள ரணில் இணங்கிவிட்டார் என்பது செய்தியாகியது. அதாவது தாங்கள் இந்தப் பிரச்சினைக்குத்தீர்வுகண்டுவிட்டது போன்ற தோற்றத்தை தமிழ் அரசுக் கட்சி கொடுத்தது. ஆனால், ரணில் யார்? உலக மகா ''பொக்ஸ்'' (நரி). தமிழ்த் தரப்பைச்சமாளிக்கவும்வேண்டும், குழப்பவும் வேண்டுமல்லவா. இல்லாவிட்டால் எப்படி அரசியல் செய்வது?

ஆக, ரணிலுடனான சந்திப்பு முடிந்து கிழக்கையும் பேச்சில் சேர்த்துக்கொள்ள அந்தச் சந்திப்பின் வாயிலாக ரணில் இணங்கினார் என்று தமிழ் அரசுக் கட்சி உரிமை கோரியதன் பின்னர் கொதித்தெழுந்த ஜனநாயகக் கூட்டணியினர், கிழக்கை பேச்சில் இணைத்துக்கொள்வது என்ற தமது கோரிக்கையை ஏற்றுக் கொள்வதாக ரணில் செவ்வாய்க்கிழமை காலையே தெரிவித்துவிட்டார், இப்போது தமிழ் அரசுக் கட்சி அதற்கு உரிமைகொண்டாடப்பார்க்கிறது என்றனர்.

என்ன நடந்தது என்றால் காலையில் நாடாளுமன்றத்தில் ரெலோ வின் கிழக்கு எம்.பி. கருணாகரனைக் கண்ட ரணில் பேச்சுக்களில் கிழக்கு எம்பிக்களையும் பங்கேற்க ஏற்பாடு செய்யச் சொல்லியிருக்கிறேன்,ஒன்றும் பிரச்சினையில்லை என்று சொல்லியிருக்கிறார். பின்னர் தமிழ் அரசுக் கட்சியினர் அந்தக் கோரிக்கையை முன்வைத்தபோது அவர்களின் கோரிக்கையையும் ஏற்றுக் கொண்டது போன்று நடந்து கொண்டார். எப்படியிருக்கிறது ரணிலின் அரசியல்? தமிழ் அரசியல்வாதிகள் அவரிடமிருந்து கற்றுக்கொள்வதற்கு எவ்வளவோ இருக்கின்றது.

- இடிமின்னல் -

## ஐ.நாவும் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:

பயங்கரவாதத் தடைச் சட்டத்தினால் தோற்றுவிக்கப்பட்டுள்ள சவால்கள் மற்றும் ஜனவரி 18 நாடாளுமன்றத்தில்நிறைவேற்றப்பட்ட புனர்வாழ்வளித்தல் தொடர்பானசட்டமூலம்ஆகியவற்றின் தொடர்ச்சியாக உங்களது ஆட்சியினால் மார்ச் 17 வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டிருக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தில் உள்ளடங்கியுள்ள கரிசனைக்குரிய விடயங்கள் குறித்து சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

ஏற்கனவே இலங்கை அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்திலும், 2020 மே மாதம் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கானஉரிமை தொடர்பான ஐ.நா. விசேட அறிக்கையாளரின் அறிக்கையிலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் காணப்படும்கரிசனைக்குரியவிடயங்களைநீக்குவதற்குமேற்கொள்ளப்படவேண்டியதிருத்தங்கள் எவையென்பது பற்றிச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அர்த்தமுள்ள வகையிலும்சர்வதேச சட்டங்களுக்குஅமைவாகவும்திருத்தியமைப்பதற்குஆதரவளிக்கும் நோக்கிலேயே அத்திருத்தங்கள் பரிந்துரைக்கப்பட்டன. இல்லாவிடின் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைமுழுமையாக நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக சர்வதேசசட்டங்களுக்குஅமைவாகப்புதியதொருசட்டத்தைத் தயாரிக்குமாறு யோசனை முன்வைக்கப்பட்டது.

அந்தவகையில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் ஊடாகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பதிலீடு செய்வதற்கு உங்களது ஆட்சி மேற்கொண்டிருக்கும் முயற்சியைப் பாராட்டும் அதேவேளை, பயங்கரவாதத் தடைச்சட்டம்தொடர்பில்நாம் ஏற்கனவே வெளிப்படுத்திய கரிசனைகளைத்தற்போதைய உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் தொடர்பிலும் முன்வைக்கின்றோம்.

எனவே பயங்கரவாதத்துக்கு எதிரான புதிய சட்டமொன்றைக் கொண்டு வருவதாயின், அச்சட்டம் சர்வதேச சட்ட நியமங்களுக்கு அமைவாகதாகக் காணப்படும் அதேவேளை தீவிர மனித உரிமை மீறல்கள், போராட்டங்களில் ஈடுபடுவதற்கான உரிமை மீதான முடக்கம், தன்னிச்சையான தடுப்புக்காவல், சித்திரவதைகள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்படல் என்பவற்றுக்கு வழி வகுத்த முன்னைய பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கூறுகள் நீக்கப்பட்டோ அல்லது மறுசீரமைக்கப்பட்டோ இருப்பது அவசியமாகும்.

இருப்பினும்இத்தேவைப் பாடுகளை உரியவாறு பூர்த்தி செய்யாமல் புதிய சட்டமொன்றைக் கொண்டுவருவதன் மூலம் பயங்கரவாதத்தை செயற்திறன்மிக்க வகையில் கட்டுப்படுத்தமுடியாது எனும் அதேவேளை, எதிர்வருங்காலங்களில் மனித உரிமை மீறல்கள் வெகுவாக அதிகரிப்பதையும் தடுக்கமுடியாது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் அர்த்தமுள்ள மறுசீரமைப்புமேற்கொள்ளப் படவேண்டியதன் அவசியத்தைஉங்களதுஆட்சியிடம் மீளவலியுறுத்துகின்றோம். உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தின்பிரகாரம் நீதிமன்ற மேற்பார்வை மற்றும் உரியவாறான நடைமுறைகளின் செயற்திறனற்ற தன்மை என்பன இச் சட்டம் தவறான முறையில் பயன்படுத்தப்படுவதற்கு வழிவகுக்கும்.

எனவே கடந்தகால மனித உரிமைமீறல்களுக்கு வழிவகுத்த சரத்துக்கள் இல்லாத ஆக்கபூர்வமான சட்ட மறுசீரமைப்பை மேற்கொள்ளுமாறு உங்களிடம் கேட்டுக்கொள்கின்றோம் என்று அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

முன்னதாக இந்தச் சட்டமூலத்திற்கு உள்நாட்டில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் பொது அமைப்புக்களும் பௌத்த மத உயர் பீடங்களும்கடும்எதிர்ப்புவெளியிட்டிருந்தன. தமிழ், முஸ்லிம் தரப்புக்கள் அந்தச் சட்டமே வேண்டாம்என்றுதெரிவித்திருந்தன.

## சுகாதாரப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பின்னணியிலேயே சுகாதாரப் பணிப்பாளர் பதவியில் இருந்து அவரை அகற்றுமாறு கொழும்பில் சுகாதார அமைச்சுக்கு அழுத்தங்கள் அதிகரித்தன என்றும் அதையடுத்தே அவர் இடம்மாற்றப்பட்டார்என்றும்தெரிவிக்கப்பட்டது.

## முள்ளிவாய்க் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நேரஉணவாகவும்இருந்தது. பெரும்பாலும் தேங்காய்ச் சிரட்டைகளில் இந்தக் கஞ்சி விநியோகிக்கப்பட்டது. அந்தக் கஞ்சியைப் பெற வரிசையில் நின்ற மக்களில் பலரும்கூட தொலைதூர எறிகணையான ஆட்லறித் தாக்குதல்களாலும் வானூர்திக் குண்டு வீச்சுக்களாலும் கொல்லப்பட்டார்கள்.

இவற்றையெல்லாம் நினைவூட்டும் வகையிலும் வரலாற்றை அடுத்த தலைமுறைகளுக்கும்கடத்தும்வகையிலும்முள்ளிவாய்க்கால்கஞ்சி வழங்கும் இந்த நிகழ்வை யாழ்ப்பாணப்பல்கலைக்கழக மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். அத்தோடு இனப்படுகொலை குறித்த துண்டறிக்கைகளையும் அவர்கள் மக்களுக்கு விநியோகித்தனர்.

வல்வெட்டித்துறையைத் தொடர்ந்து காரைநகர், யாழ். நகரப் பகுதி போன்ற இடங்களிலும் முள்ளி வாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

## மே 12 அதிகாரப்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இந்தப் பேச்சில் நாளை வியாழக்கிழமை அரசியல் கைதிகள் பிரச்சினை, காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், படையினர் மற்றும்அரசதிணைக்களங்களால் வடக்கு கிழக்கில் காணிகள் ஆக்கிரமிக்கப்படும் பிரச்சினை, பயங்ரவாதத் தடைச் சட்டம், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஆகியன உள்ளிட்ட பல்வேறு உடனடிப் பிரச்சினைள் தொடர்பில் பேசப்படவுள்ளன என்று தமிழ் அரசுக் கட்சிப் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மறுநாள் மே 12 அன்று அரதிகாரப் பகிர்வு தொடர்பில் ஆராய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். ''மே 13 அன்று மாகாணங்களின் அபிவிருத்தி தொடர்பில் பேசுவது என்று முன்னர் திட்டமிடப்பட்டிருந்தபோதும், அதனைப் பிறிதொரு தினத்தில் பேசுவது என்று இப்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. மே 12 நடத்தப்படும் அதிகாரப் பகிர்வு தொடர்பான பேச்சு முடிவடையவில்லையாயின் மறுநாளும் அது தொடரும்'' என்றார் சுமந்திரன்.

''அதிகாரப்பகிர்வுகுறித்துப் பேசும் போது எந்தெந்த ஆவணங்களில் கவனம் செலுத்தப்படவேண்டும் என்று அரசுத் தலைவர் எம்மிடம் வினவினார். தீர்வு தொடர்பில் ஏற்கனவேதயாரிக்கப்பட்டுள்ள முக்கிய ஆவணங்கள் தொடர்பில் அவருக்கு நாங்கள் விளக்கினோம்'' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அரசுத் தலைவருக்கும் ஜனாதிபதிக்கும்இடையிலான இந்தப் பேச்சு செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3.30 மணி முதல் ஒரு மணி நேரம் இடம்பெற்றது. நாளையும் மறுதினமும் நடக்கவுள்ள பேச்சுக்களுக்கு முன்னோடியாக இந்தப் பேச்சு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. பழைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்தக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அரசுத் தலைவர் செயலகத்தால் இந்தச் சந்திப்புக்கான திகதியும் நேரமும் கூட்டமைப்பின் பேச்சாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. தலைவர் சம்பந்தனின் அறிவுறுத்தலின்படி அதனை அவர் தமிழ் அரசுக்கட்சி (அதுதான் பழைய கூட்டமைப்பு) நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான புலன (வட்ஸ்அப்) குழுவில் பகிர்ந்திருந்தார். ஆனால், இந்தக் கூட்டத்துக்கான அழைப்புத்தமக்கு நேரில் அனுப்பப்படவில்லைஎன்று தெரிவித்து பழைய கூட்டமைப்பில் இருந்த புளொட் மற்றும் ரெலோ கட்சிகள் புறக்கணித்தன.

இதனால் தமிழ் அரசுக் கட்சியின் நேரடி நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 7 பேர் மட்டுமே அர சுத் தலைவருடனான சந்திப்பில் கலந்துகொண்டனர். இச்சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் குழுவின் தலைவர் இரா. சம்பந்தன், தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை சோ.சேனாதிராசா, கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் மற்றும் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிறிதரன், சாள்ஸ் நிர்மலநாதன், இரா.சாணக்கியன், கலையரசன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். முன்னாள் கூட்டமைப்பு உறுப் பினர்களும் தற்போதைய ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி உறுப்பினர்களுமான புளொட் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், ரெலொ தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், அந் தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான வினோநோகராதலிங்கம், கருணாகரம் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

நேற்றைய சந்திப்பில் தமிழ் அரசுக் கட்சி முன் வைத்த அரசியல் தீர்வு தொடர்பான பேச்சில் கிழக்கு மாகாணநாடாளுமன்றஉறுப்பினர்களையும் இணைத்துக்கொள்ளவேண்டும்என்று விடுத்தகோரிக்கையைஅரசுத் தலைவர் ஏற்றுக்கொண்டார். அதனடிப்படையில் நாளைய பேச்சுக்களில் கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். அத்தோடு வடக்கு கிழக்கு மாகாணங்களின் முன்னாள் ஆளுநர்கள் மற்றும் முன்னாள் முதலமைச்சர்களையும் இணைத்துக்கொள்வதற்கும் இந்தச் சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டதாக சுமந்திரன் தெரிவித்தார்.

## ரணிலின் சந்திப்பு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முடிவடைந்த கையோடு தூதுவரைச் சந்தித்து அரசுத் தலைவருடனான சந்திப்பின் பெறுபேறு தொடர்பில் தமிழ் அரசுக் கட்சிக் குழுவினர் தகவல்களைப் பகிர்ந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது தமிழ் அரசுக. கட்சியின் சார்பில் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

இவ்வாறு இடம்பெற்ற சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் இரு தரப்பில் இருந்தும் உத்தியோகபூர்வமாகக் கருத்துக் வெளியிடப்படவில்லை.

## ஜோன்டனின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தெரிவுக்குழுவுக்கு நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின்பிரகாரம்தலைவர்தெரிவு செய்யப்படவில்லை.

கலாநிதி ஹர்ஷ டி சில்வாவைத் தலைவராக நியமிக்குமாறு பலமுறை தெரிவுக்குழுவுக்கு வலியுறுத்தினோம். எமது தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல எதிர்க்கட்சிகளும் ஏற்றுக் கொண்டன.

அரசின் முறைகேடுகளுக்குச்சார்பாகச்செயற்படும் ஒருவரைத் தலைவராக நியமிக்க அரச தொடக்கத்தில் இருந்துபலமுயற்சிகளைமேற்கொண்டு வருகிறது. ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தலைவர் பதவியை ஏற்க மறுப்பு தெரிவித்தபோது ஆளும் தரப்பினர் அவருக்கு அழுத்தம் கொடுத்தார்கள். எதிர்க்கட்சிக்குள் முரண்பாட்டை தோற்றுவிக்க முயற்சித்தார்கள். இறுதியில் அவர்களின் முயற்சி தோல்வியடைந்தது.

நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம் அரச நிதி தொடர்பான தெரிவுக்குழுவின் தலைவர் பதவியை ஹர் டி சில்வாவுக்கு ஏன் வழங்க முடியாது என சபாநாயகர் கூறவேண்டும் - என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய ஆளும்கட்சிகளின் பிரதம கோலாசான் (கொறடா) அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அரச நிதி தொடர்பானதெரிவுக்குழுவுக்கு உறுப்பினர்களை பரிந்துரை செய்யும் அதிகாரம் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு வழங்கப்படவில்லை.

தெரிவு குழு ஊடாகவே தலைவர் தெரிவு செய்யப்படுவார். தலைவர் பதவியை நாங்கள் எதிர்க்கட்சியின் உறுப்பினர் மயந்த திஸாநாயக்கவுக்கு வழங்கினோம். அதனை ஏற்கும் மனநிலைஎதிர்க்கட்சிகளுக்கு இல்லை அதற்கு நாங்கள் பொறுப்புக் கூற முடியாது.

அரச நிதி தொடர்பான தெரிவுகுழுதலைவர்நியமன விவகாரத்தைக் கொண்டுஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு சேறு பூசுவதை எதிர்க் கட்சிகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.இவ்விடயத்தில் நாங்கள் முறையற்ற வகையில் செயற்படவில்லை - என்றார்.

இதன்போது உரையாற்றிய சுயாதீன எதிர்க்கட்சி உறுப்பினர்சந்திமவீரக்கொடி அரச நிதி தொடர்பான தெரிவுக்குழுவுக்கு நிலையான தலைவரை நியமிக்குமாறு தெரிவு குழுவின் அனைத்துக் கூட்டங்களிலும் எடுத்துரைத்துள்ளோம்.நிலையான தலைவர் இல்லாமல் தெரிவு குழுவால் எவ்வாறு முறையாகச் செயற்படமுடியும். நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம் தலைவர்பதவிஎதிர்க்கட்சிக்குவழங்கப்பட வேண்டும் - என்றார்.

சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர்களான வாசுதேவ நாணயக்கார, மொஹமட் முஸம்பில் ஆகியோர் அரசநிதி தொடர்பானதெரிவுக்குழுவின் தலைவர் பதவி எதிர்க்கட்சிக்கு வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார்கள்.

இதனைத் தொடர்ந்து எழுந்து உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரஸ்ரீலங்காபொதுஜன பெரமுனவின்உறுப்பினராகச் சபாநாயகர் இருக்கலாம், ஆனால் அவர் நாடாளுமன்றத்தில் கட்சிக்கு அப்பாற்பட்ட வகையில் சுயாதீனமாகச் செயற்பட வேண்டும். நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம் தெரிவுக் குழுவுக்கு உறுப்பினர், தலைவர்களை நியமிப்பது முறையாகச் செயற்படுவது சபாநாயகரின் பொறுப்பாகும் எனச் சுட்டிக்காட்டினார்.

## 200 மில்லியன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அதற்கான நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக உலக வங்கியுடன் கடன் வசதிகள் பற்றிப் பேச்சு நடத்துவதற்கும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## 18 வயது ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

1.3 மில்லியன் ரூபாய் பெறுமதியான போலி நாணயத்தாள்களுடன் பளை யில் கைது செய்யப்பட்ட இளைஞனுடன் தொடர்புடைய இளைஞரே யாழ்ப்பாணம் நகரில் வைத்து செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை வீதியில் பெண்கள் தங்கும் இல்லத்தில் அவரால் மறைத்து வைக்கப்பட்டிருந்த மின் அச்சு இயந்திரத்தை திங்கட் கிழமை இரவு 8 மணியளவில் வேறு இடத்துக்கு மாற்ற முற்பட்டவேளை அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறினர்.

சந்தேகநபர் இன்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். சந்தேகநபரை மே 23 வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட மன்று வழக்கு விசாரணைகளை குற்றப் புலனாய்வுத் திணைக்களத் திற்கு (சிஐடி) மாற்ற அனுமதி யளித்தது. (03)

## பௌத்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கிழக்கு மாகாண தமிழ்ப் பிரிவினைவாதஅரசியல்வாதிகள் பௌத்த மதத்துக்கும், பௌத்த புராதன தனித்துவத்துக்கும் எதிராகத்திட்டமிட்ட வகையில் செயற்படுகிறார்கள். பௌத்த மதத்தை அழிக்கிறார்கள். சிங்களவர்கள் பிற மதங்களை அழிக்கவில்லை என்பதை உறுதியாகக் குறிப்பிட வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பௌத்தசின்னங்களை பிரிவினைவாததமிழ்அரசியல்வாதிகள்திட்டமிட்டுஅழிக்கிறார்கள். பௌத்த மத வழிபாடுகளுக்கு பல்வேறு வழிகளில் தடையேற்படுத்துகிறார்கள்.

வெடுக்குநாறி பகுதியில் பௌத்த புராதான சின்னங்கள் அழிக்கப்பட்டு அதன் மீது சிவலிங்கம் உட்பட விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. வடக்கில் போர்தீவிரமடைந்தகாலத்தில் கொழும்பில் இந்துக்கள் மத வழிபாடுகளில் ஈடுபட்டார்கள், தேர் இழுத்தார்கள், சிங்கள பௌத்தர்கள் முழுமையான ஒத்துழைப்புவழங்கினார்கள். ஆகவே சிங்களவர்களின் பொறுமைக்கும் எல்லையுண்டு. அந்த பொறுமையை தமிழ் பிரிவினைவாத அரசியல்வாதிகள்சோதிக்கக்கூடாது.

தமிழ் அரசியல்வாதிகளுடன் பேச்சு நடத்தப்பட முன்னர் நாட்டில் இனப் பிரச்சினை என்பதொன்று உள்ளதா என்பதை ஜனாதிபதி ஆராயவேண்டும். இல்லாத பிரச்சினைகளைத் தோற்றுவித்து அதனை இனப்பிரச்சினை என தமிழ் அரசியல்வாதிகள் குறிப்பிட்டுக் கொள்கிறார்கள்.

அவர்களிடமிருந்து பௌத்த மத மரபுரிமைகளை பாதுகாக்க ஜனாதிபதி விசேட கவனம் செலுத்த வேண்டும் - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம் 076 443 8622

## முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கலால் .......












# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் – 18, (பழைய வட்டாரம் – 08) கடற்கரை வீதி, ஆதன இல, 890/20 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம். "சொந்தக்காரர்" ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், கொழும்புத்துறைச் சேர்ந்த வினாசித்தம்பி சின்னத்துரை அவர்கள் 11.05.1967ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சு.செ. மகாதேவா முகதாவில் 4111 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம் அவ்வூரைச் சேர்ந்த சின்னத்தம்பி திருநாவுக்கரசுக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், கொழும்புத்துறை கிழக்கிலிருக்கும் திரு நாவுக்கரசு அரியமலர், திருநாவுக்கரசு யமுனாராணியும் அவ்வூர். திருநாவுக்கரசு லலிதாம்பிகையுமாகிய அவர்கள் 15.02.1985 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு வே. நடராசா முகதாவில் 1999 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம அவ்வூர் இல 83/9 ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்த சித்திவிநாயகர் ஆறுமுகம் நவரத்தினத்திற்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, இல 83/9 சேர்ந்த சித்திவிநாயகர் ஆறுமுகம் நவரத்தினமும் பெண் இராசமணியும் ஆகியவர்கள் 25.04.1995 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு றெஜீனாரிறோஸ் அந்தோனிப்பிள்ளை முகதாவில் 1411 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம் சின்னத்தம்பி தங்க ராசாவுக்கும் பெண் சந்திரமலருக்கும் வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், கொழும்புத்துறை துண்டி, இல, 560. சேர்ந்த சின்னத்தம்பி தங்கராசாவும் பெண் சந்திரமலரும் 13.072011 ஆம். திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஜொனி சுவின்ரன் அனிறரஸ் மதுரநாயகம் முகதாவில் 222ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி மூலம் அவ்வூர் விமல தாஸ் சாள்ஸ் விவியன் பெண் தர்சிகாவிற்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் கொழும்புத்துறை துண்டி, இல, 560, சேர்ந்த விமலதாஸ் சாள்ஸ் விவியன் பெண் தர்சிகா ஆகியவர்கள் 14.03.2019 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி, ஜெயத்சித்திரா சிறீதரன் முகதாவில் 3638 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம் கொழும்புத்துறை துண்டி, இல. 360, சேர்ந்த சந்தியாப்பிள்ளை ஸ்ரனிஸ்லாஸ் யோசப்மற்றும் பெண் பற்றிமா அமலமேரிக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், சுண்டுக்குளி, குருசோவீதி, இல. 175, சேர்ந்த சந்தியாப்பிள்ளை எஸ்ரனிஸ்லாஸ் யோசேப் பெண் பற்றிமா அமலமேரி 16.10.2020ம் திகதியிட்டு பிரசித்தநொத்தாரிசு திருமதி ஜெயச்சித்திரா சிறீதரன் முகதாவில் 4158ம் இலக்கத்தில் உறுதிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தி உறுதிப்படுத்தியுள்ளனர்.

**ஆதனவிபரம்**

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம், கண்டிக்குளி கோவிற்பற்று கொழும்புத்துறை இறை இது யாழ்ப்பாணம் பிரதேச செயலகப் பகுதியில் யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்ட /61கிராம அலுவலர் பிரிவில் உள்ள "கடற்கரைவயல்" நெற்பரப்பு 40 இதில் தெற்குப்புறமாக நெற்பரப்பு 14 குளி 9 இது உத்தரவுபெற்ற நில அளவையாயளர் சி. இராசகாரியரினால் 1984.04.23 ஆம் திகதி 3766 ஆம் இலக்கத்தில் அளந்தநில அளவைப்படத்தில் லொட் 6 எனக்காட்டப்பட்ட பகுதி நெற்பரப்பு ஒன்று (நெற்பரப்பு 01) இந்த நெற்பரப்பு ஒன்றுக்கும் எல்லைகள்.

கிழக்கு: லொட் 7பு எனக்காட்டப்பட்ட கந்தையா கமல்ராசின் ஆதனம்.
வடக்கு ஒழுங்கை.
மேற்கு: லொட் 5எனக்காட்டப்பட்டம்.சி சாமுவேலுக்கும் உரிய ஆதனம்.
தெற்கு வாய்க்கால். இதிலடங்கலும்.
பெண் றெஜீனா எலிசபேத்திற்கும்

தற்போது யாழ்ப்பாணம், சுண்டுக்குளி, குருசோ வீதி, இல. 175, சேர்ந்த சந்தியாப்பிள்ளை ஸ்ரனிஸ்லாஸ் யோசேப் மனோகரன் பெண் பற்றிமா அமலமேரி இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது ஸ்ரனிஸ்லாஸ் யோசேப் மனோகரன் பெண் பற்றிமா அமலமேரி என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்,**

# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் – 24 ஆஸ்பத்திரி வீதியில் 721 ஆம் ஆதன இலக்கத்தைக் கொண்ட 'திரு.P.மைக்கல்' என்ற பெயரில் எமது பதிவேட்டில் இலக்கத்தைக் காணப்படுகிறது.

இதன் கீழ் அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் யோவான் மியாம் பிள்ளை டம். பெண் சிவநேசனும் 13.05,1938 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு பெர்னாட் யுவக்கிம்பிள்ளை முகதாவில் 19614 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றிய உறுதி மூலம் எலிசபேத் செல்லம்மா என்பவரிற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை டேவிற் லிகோரி 03.11.2017 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திரு J.S.A மதுரநாயகம் முகதாவில் 3777ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் கந்தசாமி ராமு பெண் அருள்மலர் ஈகை செய்துள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று, கரையூர் இறை. பிரதேசசெயலர் பிரிவு: யாழப்பாணம், யாழ்ப்பான மாநகரசபை,கிராமசேவகர் பிரிவு: J/74 வீரபத்திரன் புலம் நிலப்பரப்பு 5 கல்வீடும் செய்வான்பயிர்களும்

இந்த நிலப்பரப்பு 5 1/4 க்கும் எல்லை
கிழக்கு : ஒழுங்கை
வடக்கு : மனுவல் மகள் மாகிறேற்றின் ஆதனம்
மேற்கு : சாமுவேல் சவரிமுத்துவினதும் பங்காளருக்குமுரிய ஆதனம்
தெற்கு : றோட்டு

இதடங்கலிற் சொரியலாய் நிலப்பரப்பு 2 ஆனால் இது பின்னர் 06.06.2017 இல் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் திரு மெல்வின் ஞானப்பிரகாசம் அவர்களால் 2880 ஆம் இலக்கத்தில் அளந்து தயாரித்த நிலஅளவைப்படத்தில் Lot 1 எனக்குறிப்பிடப்பட்ட துண்டாகிய நிலப்பரப்பு 1 குளி 14 ம் வீட்டின் ஒரு பகுதியும், கிணறும் மலசலகூடமும்

இந்த நிலப்பரப்பு 1 குளி 14 க்கும் எல்லை
கிழக்கு : பிலிப் கபிரியேல் டேவிட் உம் பெண் எலிசபெத்தினதும் மறுபேரினதும் ஆதனம்
வடக்கு : மாகிறற் ரட்ணம் மனுவலின் ஆதனம்
மேற்கு : திருமதி றிச்சேட்ஸ் இனதும் சாமுவேல் சவரிமுத்துவினதும் பங்காளி னதும் ஆதனம் தெற்கு ஆஸ்பத்திரி வீதி

மேலும் இக்காணிக்குள் இருக்கும் கிணற்றில் கிழக்கு பக்க ஆதனத்திற்கு கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் அடங்கலாக

தற்போது கந்தசாமி ராமு பெண் பதிவேட்டில் பெயர்மாற்றம் அருள்மலர் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது ஆதனவரி செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே பகுதிக்கு/முழுவதிற்கும் உரிமை கோருபவர் யாராவது இருட்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து இவ்வாதனத்தின் ஏதேனும் ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது கந்தசாமி ராமு பெண் அருள்மலர் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை. யாழ்ப்பாணம்.**

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பேச என்னதான் இருக்கிறது?

அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வடக்கு கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நாளையும் மறுநாளும் நடக்க இருக்கும் பேச்சில் ஆராயப்படவுள்ள விடயங்கள் தொடர்பில் நேற்று தமிழ் அரசுக் கட்சியினருடனான சந்திப்பில் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி நாளை உடனடிப் பிரச்சினைகள் (இதனை நல்லிணக்க முயற்சி என்று வகைப்படுத்துகிறார்கள்) குறித்தும் மறுநாள் அரசியல் தீர்வு குறித்தும் பேச முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த இரு விடயங்கள் குறித்தும் பேச என்ன இருக்கின்றது என்பது தெரியவில்லை. இவை குறித்துப் பல தடவைகள் பேசியாகிவிட்டது. புதிய அரசமைப்பு வரைவுகள், தீர்வுப் பொதிகள் என்று பலதும் அந்தப் பேச்சுக்களின் வழி தயாரிக்கப்பட்டுவிட்டது. அவை ஆவணங்களாக ஏற்கனவே உள்ளன. தமிழ்க் கட்சிகளின் கோரிக்கை என்ன என்பது, அதாவது வேறு வேறு வார்த்தைகளில் சொன்னாலும் இணைப்பாட்சி (சமஷ்டி) என்துதான் தீர்வு என்பதும் எப்போதோ தெளிவாகிவிட்டது. எனவே இவற்றில் தற்போதைய ஆளும் தரப்பு எவற்றையெல்லாம் நிறைவேற்றப் போகின்றது என்கிற அறிவிப்பை வெளியிடவேண்டியது மட்டும்தான் மீதமுள்ள விடயம். இதில் இன்னும் இன்னும் பேச என்ன இருக்கின்றது? காலத்தை வீணடிப்பதைத் தவிர?

ஆளும் தரப்பு நல்லிணக்க முயற்சி என்று சொல்லும் தமிழர்களின் உடனடிப் பிரச்சினைகளான அரசியல் கைதிகள் விடுதலை, படைகளின் ஆக்கிரமிப்பிலிருக்கும் மக்களின் காணிகளின் விடுவிப்பு, காணாமற்போனவர்கள் தொடர்பான விசாரணை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஆகியன தொடர்பாகவே நாளை பேச்சு நடத்தப்பட இருக்கிறது. இவற்றில் பேச என்ன இருக்கின்றது? இவை தொடர்பில் ஏற்கனவே எல்லா விவரங்களும் ரணில் விக்கிரமசிங்கவிடமும் ஆட்சியாளர்களிடமும் வழங்கப்பட்டுள்ளன. அரசியல் கைதிகள் விடுதலையில் எஞ்சியவர்களை எப்போது எப்படி விடுவிப்பார்கள் என்று ஆளும் தரப்புத்தான் சொல்ல வேண்டும், காணி விடுவிப்புத் தொடர்பிலும் படையினர் எப்போது வெளியேறுவார்கள் என்பதை அல்லது காணியை விடுவிக்கவே மாட்டோம் என்பதை ஆளும் தரப்புத்தான் சொல்லவேண்டும், காணாமற்போனவர்கள் தொடர்பான நீதியான நம்பகத்தன்மை வாய்ந்த விசாரணையை எப்படி முன்னெடுக்கப்போகிறார்கள் என்பதையும் அவர்கள்தான் சொல்லவேண்டும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவார்களாக மாட்டார்களா என்பதையும் அவர்கள்தான் சொல்லவேண்டும். இப்படி எல்லாவற்றுக்கும் ஆளும் தரப் பின் பதில்தான் தரப்படவேண்டியிருக்கிறதே தவிர ஒரு நாள் முழுக்க பேச்சு நடத்த என்ன இருக்கிறது?

இந்த விடயங்கள் தொடர்பில் கிளிப் பிள்ளைகள் போல இதற்கு முன்னர் என்ன சொன்னார்களோ அதையேதான் திரும்பத் திரும்ப தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சொல்லப் போகிறார்கள். வேறு புதிதாக அவர்கள் ஏதும் சொல்லப்போவதில்லை. அப்படியிருக்கும்போது ஒரு நாள் முழுக்க இது குறித்துப் பேச என்ன இருக்கிறது என்பது தெரியவில்லை.

அதேபோன்றுதான் அரசியல் தீர்வு தொடர்பான பேச்சும். தமிழர்கள் உடனடியாகக் காணப்படவேண்டிய அரசியல் தீர்வு குறித்தும் நீண்ட கால நோக்கில் செய்யப்படவேண்டிய தீர்வு குறித்தும் எல்லாவற்றையும் தெரிவித்துவிட்டார்கள். இதில் ஆளும் தரப்பு எவ்வளவு தூரத்திற்கு அதிகாரங்களைப் பகிரப் போகிறது என்கிற பதிலுக்குத்தான் தமிழ்த் தரப்புக் காத்திருக்கிறது. உதாரணத்திற்கு அரசமைப்பின் 13ஆவது திருத்தம் பற்றிப் பேச என்ன இருக்கிறது. அதை நடைமுறைப்படுத்து–வாரா இலையா என்கிற பதிலையும் நடைமுறைப்படுத்தினால் என்ன கால அட்டவணையில் அவர் அதனைச் செய்வார் என்கிற விவரத்தையும் மாகாண சபைத் தேர்தலை நடத்து–வதாக இருந்தால் அதை எப்போது நடத்துவார் என்கிற அறிவிப்பையும் ஆளும் தரப்பு சொல்வதைத் தவிர பேசுவதற்கு என்ன இருக்கின்றது?

நிரந்தரத் தீர்வு தொடர்பில் சந்திரிக்காவின் தீர்வுப் பொதி, ரணிலின் தலைமையிலேயே 2015 முதல் 2019 வரையான காலப் பகுதியில் தயாரிக்கப்பட்ட புதிய அரசமைப்புக்கான வரைவு மகிந்த காலத்து அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவின் அறிக்கை என்று பல ஆவணங்கள் இருக்கின்றன. இவற்றில் எதை அல்லது எந்த ஆவணத்திலிருந்து எதை தீர்வாகத் தர இந்த ஆளும் தரப்பு சித்தமாக இருக்கின்றது என்பதை அறிவிப்பதைத் தவிர பேச என்ன இருக்கின்றது.

பேச்சு மேசையில் இதுபோன்ற எந்த அறிவிப்பையும் அல்லது முடிவையும் அல்லது தீர்வையும் முன்வைக்காமல் கீறல் விழுந்த ரெக்கோர்ட் போன்று தமிழ்த் தரப்பின் கோரிக்கைகளையும் கருத்துக்களையும் திரும்பத் திரும்பக் கேட்பதால் எந்த முன்னேற்றமும் வந்துவிடாது. அப்படிப்பட்ட பேச்சுக்கள் காலத்தைக் கடத்தும் உத்தியே தவிர வேறில்லை. இனிமேல் பேச்சு என்பது ஆளும் தரப்பு என்ன செய்யப் போகிறது என்பதை அது அறிவிப்பதில் இருந்து மட்டுமே தொடங்கப்படவேண்டும். அப்படியில்லாத எந்தவொரு பேச்சும் ஏமாற்றுத்தான்.

## முஸ்லிம் சமூக சவால்களை கலந்தாலோசிக்க அமைச்சர் நஸீர்அஹமட் அவசரமாக அழைப்பு



முஸ்லிம் சமூகத்தின் சமகால சவால்களை தீர்த்து வைக்கும் பொதுவான வரைபைஞ தயாரிக்கும் தருணம் வந்துள்ளது. இனியும், தனித் தனியாகச் செயற்பட்டு சமூக உரிமைகளை வெல்ல முடியாதென்பதே நிதர்சனமாகியுள்ளதாக அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக் கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

சிறுபான்மை சமூகங்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஜனாதிபதி முனைப்புடன் செயற்படுவதை நான் அறிவேன்.

எனவே, இழக்கப்பட்ட முஸ்லிம்களின் காணிகளை மீளப்பெறவும், இதனுடன் தொடர்புடைய ஏனைய பிரச்சினைகள் குறித்தும் பொதுவான வரைபை தயாரிக்க வேண்டியுள்ளது. வடக்கில் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட பின்னர் பறிபோன காணிகள் மற்றும் கிழக்கில் திட்டமிட்டு விழுங்கப்பட்ட முஸ்லிம்களின் பூர்வீக நிலங்களைப் பெற வேண்டிய அவசியம் நமக்கு இருக்கிறது. இதற்கு அரசியல் தலைமையென்ற ரீதியில் நாம் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

உதாரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 27 சத வீதமான முஸ்லிம்கள் வாழ்கின்னறனர். இம்மாவட்டத்தில் மொத்தமாகவுள்ள 14 பிரதேச செயலகங்கள் பிரிவில்,நான்கு பிரதேச செயலகங்களிலே முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர்.

இச்செயலகங்களில் வாழும் முஸ்லிம்களுக்கு,1.3 வீதமே காணிகளே உள்ளன. இவையும் திணிக்கப் பட்டே இவர்களுக்கு வழங்கப் பட்டுள்ளன. இதே நிலைதான்,அம்பாறை, திருமலை உட்பட வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் நிலவுகிறது.

இது தவிர, எல்லை நிர்ணய அறிக்கைகளிலும் சில சந்தேகங்கள், பாரிய ஆபத்துக்கள் உள்ளன. முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை குறைக்கும் அல்லது அவர்களின்பெரும்பான்மைபலத்தை சிதைக்கும் வகையிலேயே இந்த அறிக்கை உள்ளது. புதிய தேர்தல் முறையிலும் முஸ்லிம் சமூகம் பாதிக்கப் படாதவாறு பணியாற்ற நாம் வேண்டியுள்ளது.

எனவேதான்,முஸ்லிம் சமூகத்தின் இவ்வாறான சமகால சவால்கள் தொடர்பில் சமூகப் பிரதிநிதிகளிடம் ஒருமித்த கருத்து நிலவு வது அவசியம். இக்கருத்தொற்றுமையுடனும் போதிய ஆவணங்களுடனும் முஸ்லிம் பிரதிநிதிகள் ஜனாதிபயைச் சந்திக்கவேண்டும். இதற்காக, சகல முஸ்லிம் தலைமைகளும்,எம்பிக்களும் தங்களது அரசியல் பேதங்களைப் புறந்தள்ளி ஒன்றுபடுமாறு அழைக்கிறேன். ஒற்றுமையில்தான், பொது வரைபை தயாரிக்கலாம்.

இந்த வரைபினால், சகோதர சமூகங்களையும் புரிந்துணர்வுக்கு கொண்டு வர முடியும்.ஒரே தாய்மொழியினராகிய தமிழரும்,முஸ்லிம்களும் தொடர்ந்தும் பிணக்குகளுக்குள் சிக்கியிருப்பதுசிறுபான்மைச்சமூகங்களை ஈடேற்றாது என்பதையே வரலாறு உணர்த்தியிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## வங்கித்துறை உறுதிப்பாட்டுக்கு அச்சுறுத்தல் வராது மத்திய வங்கியின் உத்தரவாதம் ஆறுதல் அளிக்கிறது!

### என்கிறது இலங்கையிலுள்ள வங்கிகளின் கூட்டிணைவு

உள்ளகக் கடன்மறுசீரமைப்புச் செயன்முறையின்போது வங்கித்துறையின் உறுதிப்பாட்டுக்கு அச்சுறுத்தல் ஏற்படாது என்று மத்திய வங்கி உத்தரவாதமளித்திருப்பது தமக்குப் பெரிதும் ஆறுதலளிப்பதாக இலங்கையிலுள்ள வங்கிகளின் கூட்டிணைவு தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டுக்கு அமைவாக உள்ளகக் கடன்மறுசீரமைப்பை மேற்கொள்ளும்போது உள்நாட்டு வங்கி மற்றும் நிதியியல் கட்டமைப்புக்களின் செயற்பாடுகள் பாதிக்கப்படும் என்று பல்வேறு தரப்பினராலும் கருத்துக்கள் வெளியிடப்பட்டுவரும் பின்னணியிலேயே இலங்கையிலுள்ள வங்கிகளின் கூட்டிணைவு மேற்குறிப் பிட்டவாறு தெரிவித்துள்ளது. அக் கூட்டிணைவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

உள்ளகக் கடன்மறுசீரமைப்பு குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருடன் முன்னெடுக்கப்படும் பேச்சுவார்த்தைகளின்போது வங்கித்துறையின் உறுதிப்பாடு அச்சுறுத்தலுக்குள்தள்ளப்படாது என்று வங்கித்துறையை ஒழுங்குபடுத்தும் அதிகாரம்பொருந்திய கட்டமைப்பான மத்திய வங்கி உத்தரவாதமளித்திருப்பது எமக்கு பெரிதும் ஆறுதலளிக்கின்றது.

கடன்மறுசீரமைப்பை மேற்கொண்டதன் பின்னர் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கக் கூடியவகையில் போதியளவிலான நிதியையும் திரவத்தன்மையையும் வங்கி கள் பேணவேண்டியது அவசியமாகும். அதனுடன்இணைந்ததாக கையிருப்பின் அளவு மற்றும் வரவு, செலவுத் திட்டப் பற்றாக்குறை ஆகியவற்றை சாதகமான மட்டத்துக்குக் கொண்டுவருவதற்கு ஏதுவான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதி தொடர்பான இறுதிக்கட்ட இணக்கப்பாட்டை அடைந்துகொள்வதற்கு மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட வலுவான முயற்சிகளை நாம் பாராட்டுகின்றோம். இந்த இணக்கப் பாடானது இவ்வாண்டில் சந்தை நிலைவரம் மற்றும் பொருளாதாரக்காரணிகள் என்பன மேம்பாடடைவதற்குப் பங்களிப்புச்செய்துள்ளது.

அதேவேளை பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதுடன் பொருளாதார ஸ்திரத்தன்மையை மீளுறுதிப்படுத்தும் நோக்கில்மத்தியவங்கியினால் மேற்கொள்ளப்பட்ட இறுக்கமான கொள்கைத்தீர்மானங்களும் பெரிதும் வரவேற்கப் படவேண்டியவையாகும்.

கையிருப்பு மற்றும் நிதியியல் மறுசீரமைப்புக்கள் தாமதமடையும் பட்சத்தில் பொருளாதாரமும் வங்கிக் கட்டமைப்பும் முகங்கொடுக்கக்கூடிய சவால்கள் மிக முக்கியமானவையாகும். இவ்வாறானதொரு பின்னணியில்மத்தியவங்கியினால் வழங்கப்பட்டுள்ள உத்தரவாதத்தை அடிப்படையாகக் கொண்டு நாம் திருப்தியடைகின்றோம் என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மன்னார் கடத்தல் முயற்சிளை அடுத்து: பாடசாலைகளில் கடும் பாதுகாப்பு





மன்னார், மே 10

மன்னாரில் கடந்த சில நாள்களாக சிறுவர்களை இலக்கு வைத்து கடத்தல் முயற்சிகள்இடம்பெறுகின்றன எனவும் கடந்த சனிக்கிழமை மற்றும் திங்கட்கிழமை மக்கள் நடமாட்டம் குறைந்த பாதை வழியாக பயணித்த இருசிறுவர்களுக்குஉணவுப் பொருள்களைவழங்கி கடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன எனப்பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த விடயம் மாவட்ட அரசாங்க அதிபர், வலயக்கல்வி பணிப்பாளர், மன்னார் பொலிஸார், இராணுவத்தினரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட நிலையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) மன்னாரில் உள்ள பாடசாலைகளுக்கு விசேட இராணுவப் பாதுகாப்பு வழங்கப் பட்டு இருப்பதுடன் பொலிஸாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அதேநேரம்அதிகளவான பெற்றோர்களும் பிள்ளைகளுடன் பாடசாலைக்கு வருவதையும் மாணவர்கள் குழுக்களாகப் பயணிப்பதையும் வீதிகளில் அவதானிக் கக்கூடியதாக உள்ளது.

மேலும் குறித்த கடத்தல் முயற்சி தொடர்பில் திங்கட்கிழமை மன்னார் பொலிஸில் முறைப்பாடு செய்யப் பட்ட நிலையில் குறித்த கடத்தல் கும்பல் மற்றும் வாகனம் தொடர்பாக மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றமைகுறிப்பிடத்தக்கது.

## மோட்டார் சைக்கிளில் கடத்தப்பட்ட ஒரு கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருள் வத்தளையில் சிக்கியது!

மோட்டார் சைக்கிளில் கடத்திச் செல்லப்பட்ட ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான ஐஸ்போதைப் பொருள்மற்றும்கடத்தல்மூலம் சம்பாதித்ததாகக் கூறப்படும் பணத்தொகையுடன் ஒருவர் வத்தளை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப் பட்டதாக பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

சந்தேக நபரிடமிருந்து ஒரு கிலோ ஐஸ் போதைப் பொருள், இலத்திரனியல்தராசு மற்றும்ஒருதொகைப்பணம் கையடக்கத் தொலைபேசிகள்மற்றும்போக்குவரத்துக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நீண்டகாலமாக பாரியளவில்ஐஸ்போதைப்பொருள் விநியோகம்செய்துவரும்சந்தேக நபர் தொடர்பில் விசேட அதிரடிப்படை கொனஹேன முகாமின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் விசேட அதிரடிப்படையினர் இந்த சோதனையை மேற்கொண்டிருந்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் குறித்து சிவில் சமூகப் பிரதிநிதிகளிடம் கேட்டறிவு!

## ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் குழுவும் அதிருப்தி

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தின் பாதகமான தன்மை குறித்து சிவில் சமூகப்பிரதிநிதிகளிடம் கேட்டறிந்துகொண்ட ஐரோப்பிய ஒன்றிய உயர்மட்ட அதிகாரிகள்குழு, அந்தச் சட்டமூலம் தொடர்பில் தமது அதிருப்தியை மறைமுகமாக வெளிப்படுத்தியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கும்இலங்கைக்கும்இடையிலான கூட்டு ஆணைக்குழுவின் 25 ஆவது கூட்டம் நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெறவுள்ள நிலையில், இதில் பங்கேற்பதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆசிய, பசுபிக் வெளிவிவகார சேவையின் பிரதி நிறைவேற்றுப்பணிப்பாளர் பயோலா பம்பலோனி தலைமையிலான பிரதிநிதிகள் குழு நாட்டை வந்தடைந்துள்ளது.

இந்தப் பிரதிநிதிகளுக்கும் இலங்கையின் சிவில் சமூகப்பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த திங்கட்கிழமை கொழும்பில் அமைந் துள்ள ஐரோப்பிய ஒன்றியத் தூதரகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூகசெயற்பாட்டாளர்களான மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் ஆய்வாளரும் சட்டத்தரணியுமான பவானி பொன்சேகா, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும் சட்டத்தரணியுமான அம்பிகா சற்குணநாதன், தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் கலாநிதி ஜெஹான் பெரேரா, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின்முன்னாள்தலைவர் ஜனாதிபதிசட்டத்தரணிசாலிய பீரிஸ், ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெனல் அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் நதீஷானி பெரேரா ஆகியோர் கலந்துகொண்டனர்.

சுமார் இரண்டு மணி நேரம்வரை நீடித்த இந்தச் சந்திப்பில் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம், ஊழல் எதிர்ப்புச்சட்டமூலம், சிவில் சமூக அமைப்புக்கள் தொடர்பில் கொண்டுவருவதற்கு எதிர்பார்க்கப்படும்சட்டம், உள்ளூராட்சிமன்றத்தேர்தல்கள் விவகாரம், உண்மைமற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உருவாக்கம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது குறிப்பாக சுமார் 40 வருடங்களுக்குப் பின்னர்ஜனாதிபதிகோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான முன்னைய அரசாங்கத்தால் பயங்கரவாதத்தடைச் சட்டத்தை மறுசீரமைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி தமது தலையீடுகளுக்குக் கிடைத்த வெற்றி என்று சிவில் சமூகப்பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டிய பயோலா பம் பலோனி, தற்போது அரசாங் கத்தால் முன்மொழியப் பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்ட-மூலத்தில் காணப்படும் பிரச்சினைக்குரிய விடயங்கள் என்னவென்பதையும் கேட்டறிந்துகொண்டார். அதன்படி 'பயங்கரவாதம்' என்ற சொற்பதத்துக்கான விரிவானவரைவிலக்கணம், தொழிற்சங்கவாதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் இலக்குவைக்கப்படக்கூடிய தன்மைஎன்பன உள்ளடங்கலாக பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தில்காணப்படும் மிகமோசமான விடயங்கள் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகளிடம் சிவில் சமூகப்பிரதிநிதிகள் எடுத்துரைத்தனர்.

அதுமாத்திரமன்றி கடந்த காலத்தில் 'அரகலய' என அறியப்படும் எதிர்ப்புப் போராட்டத்தின்மீது அரசாங்கம் அடக்குமுறையைப் பிரயோகித்தபோது மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் மதத்தலைவர்களும் அதற்கு எதிராகப் போராடினர் எனவும் இருப்பினும் அரசாங்கம் அதனைக் கருத்திலெடுக்கவில்லை என்றும் ஐரோப்பிய ஒன்றியப்பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டிய அவர்கள், எனவே தற்போது பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூல விவகாரத்தில் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு சர்வதேச சமூகத்தின் வலுவான அழுத்தம் அவசியம் என்று வலியுறுத்தினர்.

மேலும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை ஸ்தாபிப்பது வரவேற்கத்தக்க விடயமா? என பயோலாபம்பலோனியினால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த சிவில் சமூகப்பிரதிநிதிகள், இது சர்வதேச சமூகத்தை மகிழ்விக்கும் நோக்கிலான வெறும்கண்துடைப்பு நடவடிக்கையே தவிர, நாட்டு மக்களின் நலனை முன்னிறுத்திய தீர்வை இலக்காகக்கொண்ட நடவடிக்கை அல்ல என்று சுட்டிக்காட்டினர்.

இவற்றை செவிமடுத்த ஐரோப்பிய ஒன்றியப்பிரதிநிதிகள் இலங்கை குறித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அறிக்கை மற்றும் சிவில் சமூகப்பிரதிநிதிகளின் நிலைப்பாடு ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டே தாம் இலங்கை தொடர்பில் முக்கிய தீர்மானங்களை மேற்கொள்வதாகத் தெரிவித்தனர்.

## பாலமுனை பிரதேச வைத்தியசாலையில் ஆய்வுகூடம், வாகன தரிப்பிடம் பிராந்தியப் பணிப்பாளரால் திறப்பு



பாலமுனை பிரதேச வைத்தியசாலையில் பி.எஸ்.பி. திட்டத்தின் கீழ் மீள்புனரமைப்புசெய்யப்பட்ட வைத்திய ஆய்வுகூடம் மற்றும் சமையலறை என்பன திங்கட்கிழமை திறப்பு விழா செய்யப்பட்டதோடு குறித்த ஆய்வு கூடத்தை கல்முனை பிராந்தியத்துக்குரிய தனித்துவமானதும் பிரதான துமான ஆய்வுகூடமாக மாற்றுவதற்கான திட்ட யோசனையும் கல்முனை பிராந்திய சுகாதார பணிப்பாளரால் மாகாண மற்றும் மத்திய அமைச்சின் சுகாதார பிரிவுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வு கூடத்துக்கு பிரதேச மக்களினதும், அபிவிருத்தி குழுவினதும் அளப்பரிய பங்களிப்பு கிடைக்கப் பெற்றுள்ளதுடன் வைத்தியசாலையின் நலன் விரும்பிகளால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பொருள்களாலும் வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட வாகன தரிப்பிடமும் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

பாலமுனை பிரதேச வைத்தியசாலையின் பிரதேச வைத்திய அதிகாரி டக்டர் எம்.ஜே. நௌபல் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வுகளில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல். எம்.றிபாஸ் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். மேலும் கௌரவ அதிதியாக பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எம்.பி.ஏ. வாஜித் அவர்களும் சிறப்பு அதிதிகளாக திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.சி.எம். மாஹீர், அட்டாளைச்சேனை பிரதேச சபை முன்னாள் தலைவர் சட்டத்தரணி எம்.ஏ. அன்ஸில் மற்றும் சுகாதார பணிமனையின் பிரிவுத் தலைவர்கள், வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினர்களும் கலந்து கொண்டனர்.





## கிழக்கு மாகாண அமைச்சுகளின் செயலர்களை சந்தித்த ஆளுநர்!

கிழக்கு மாகாண சபையின் அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்களின் விசேடகூட்டம்திங்கட்கிழமை பிற்பகல் திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் மாகாண ஆளுநர் திருமதி அனுராதா யஹம்பத் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது, தற்போதைய திட்டங்களின்முன்னேற்றம் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் சிறப்புத் திட்டங்கள் பற்றி நீண்டநேரம் ஆளுநர் கலந்துரையாடினார்.

இந்நிகழ்வில் மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம். பி.எஸ் ரத்நாயக்க, ஆளுநரின் செயலாளர் எல்.பி. மதநாயக்க, மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

## ஹிக்கடுவை இஸ்ஸோ சுஜியின் இருவங்கி கணக்குகள் முடக்கம்!

பாரியளவிலான போதைப்பொருள் கடத்தல்காரருக்கு சொந்தமானதாகக் கருதப்படும்இரண்டுதனியார் வங்கிகளில் உள்ள கணக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, சட்டவிரோத சொத்துக்கள் புலனாய்வு பிரிவினரால் தடைசெய்யப்பட்டுள்ளன.

ஹிக்கடுவையைச் சேர்ந்த இஸ்ஸோ சுஜி என அழைக்கப்படும் குணரத்ன சுஜித் சில்வாவின் வங்கிக் கணக்குகளே இவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ளன.

பாணந்துறை மற்றும் தென் மாகாணத்தை மையமாக கொண்டு டுபாய் நாட்டிலிருந்து போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட் டுள்ள நபரின் கணக்குகளே இவ்வாறு தடை செய்யப்பட்டுள்ளன.

2021ஆம்ஆண்டுஏப்ரல் மாதம் முதல் ஓகஸ்ட் மாதம் வரையான 4 மாத காலப்பகுதியில் குறித்த பணம் வங்கியில் வைப்புச்செய்யப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேற்படி கணக்குகளில் 5 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணம் வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

## சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட முனைந்த 07 மீனவர்கள் வெடிப்பொருள்களுடன் கைது

சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடும் நோக்குடன் வெளிக்கள மீன்பிடி படகு ஒன்றில் டைனமற் வெடி பொருள்களுடன் சென்ற மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் மன்னார் தென்கடல் பகுதியில் திங்கட்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது - மன்னார்நகர்கடற்கரைப் பகுதியிலிருந்து மன்னார் தென் கடல் பரப்பில் ஏழு மீனவர்கள் வெளிக்களப் படகு ஒன்றில் சட்டவிரோதமான முறையில் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர்.

வங்காலை பிரதேச கடற்படையினர் படகை சோதனையிட்டபோது, சட்டவிரோத முறையில் மீன் பிடிக்கு பாவிக்கப்படும் டைனமற் வெடிப் பொருள்கள் காணப்பட்டதால் படகுடன் ஏழு மீனவர்களையும் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்களான மீனவர்களுடன் படகையும் மற்றும் சான்றுப் பொருள்களையும் மன்னார் கடற்தொழில் திணைக்களம் பொலிஸாரிடம் சட்ட நடவடிக்கைக்காக ஒப்படைத்துள்ளது.

மன்னார் பொலிஸார் சந்தேக நபர்களை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளதுடன், நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

## இறக்காமத்தில் காணிக் கச்சேரி



இறக்காமம்பிரதேசசெயலகப் பிரிவில் மிக நீண்ட காலமாக இருந்துவரும் காணி அனுமதிப்பத்திரப்பிரச்சினைகளுக்கு இறக்காமம் பிரதேசசெயலாளர் அஷ்யேக் எம்.எஸ்.எம். ரஷான் (நளீமி) அவர்களின் வழிகாட்டலில் துரித கதியில் காணி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் நடைபெற்றுவருகின்றன.

அந்தவகையில், இறக்காமம் 07 ஆம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் நீண்ட காலமாக குடியிருந்து வரும் காணிகளுக்கு அனுமதிப்பத்திரம் கோரி விண்ணப்பித்தவர்களுக்கு காணி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான காணிக் கச்சேரி நிகழ்வு பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம். ரஷான் (நளீமி) தலைமையில் திங்கட்கிழமை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் காணி உத்தியோகத்தர் என்.எல்.எம். மாஹிர், காணிப் பிரிவு உத்தியோகத்தர்களான காணி வெளிக்களப் போதனாசிரியர் எம்.பி. சாதிக், அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.வை.எம். சில்மி மற்றும் கிராம உத்தியோகத்தர்களான எம். சீ.எம். சமீர், எம்.ஜே. எம் அதீக் ஆகியோர் கலந்து கொண்டதோடு பொதுமக்களும் வருகைதந்து பயன் பெற்றனர்.






## மிகப் பெரிய மாணிக்கக்கல் மதிப்பு குறித்துத் தகவல்



இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட உலகின் மிகப் பெரிய மாணிக்கக் கல்லின் உண்மையானமதிப்புதொடர்பில் தகவல் ஒன்று வெளியாகி உள்ளது.

அதன்படி மாணிக்கக் கல் 200 மில்லியன் அமெரிக்க டொலர் என விளம்பரப்படுத்தப்பட்ட குறித்த மாணிக்கக் கல்லின் உண்மையான மதிப்பு 10,000 அமெரிக்க டொலர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது (சுமார் முப்பத்தாறு லட்சம் ரூபா எனத் தெரியவந்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற சுற்றுச் சூழல் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழு இதைத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, குறித்த மாணிக்கக்கல் டுபாய்க்கு முதலில் கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து சுவிற்ஸர்லாந்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. எனினும், இந்த கல்லை விற்பனை செய்ய முடியாத நிலை காரணமாக, குறித்த மாணிக்கக்கல் மீண்டும் நாட்டிற்கு கொண்டு வரப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# தேசிய கடன் மறுசீரமைப்பு ஒட்டுமொத்த மக்களையும் அரசாங்கம் ஏமாற்றுகிறது!

## ஜி.எல்.பீரிஸ் எச்சரிக்கை



வங்குரோத்து அடைந்தும் ஊழல் மோசடி முடிவுக்கு கொண்டு வரப்படவில்லை நாட்டுக்கு வருகை தரவுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவிடம் அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளை எடுத்துரைப்போம். தேசிய கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் அரசாங்கம் ஒட்டுமொத்த மக்களையும் ஏமாற்றுகிறது என நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் சுதந்திர மக்கள் சபையின் ஆலோசகர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாவலபகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள அரசாங்கம் ஏற்றுக் கொண்ட நிபந்தனைகளை செயற்படுத்தும் போது சமூக கட்டமைப்பு மிக மோசமாக பாதிக்கப்படும். நடுத்தர மக்கள் எதிர்கொள்ளும் பாதிப்புக்கு ஒட்டுமொத்த நாடாளுமன்றமும் பொறுப்பு கூற வேண்டும் என்ற நிலைமையை அரசாங்கம் தோற்றுவித்துள்ளது.

நாணய நிதியத்தின் 2.9 பில்லியன் டொலர் நீடிக்கப்பட்ட நிதி வசதியை பெற்றுக்கொள்ள அரசாங்கம் கடுமையான நிபந்தனைகளை அமுல்படுத்தியுள்ளது. இதனால் எதிர்வரும் நான்கு ஆண்டு காலப் பகுதியில் மாத்திரம் சகல சேவைகளுக்குமான வரி 119 சதவீதத்தால் அதிகரிக்கப்படும். இதை நடுத்தர மக்களால் பொறுத்துக் கொள்ள முடியாது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான சிறந்த திட்டங்களை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் முன்வைக்கவில்லை. நாணய நிதியம் முன்வைத்த நிபந்தனைகளை கண்மூடி ஏற்றுக்கொண்டது. இதனால் நடுத்தர மக்களே பாதிக்கப்படுவார்கள். இந்த அரசாங்கம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் உணர்வுபூர்வமாக அவதானம் செலுத்தாது.

2024 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் பிரகாரம் நிச்சயம் ஆட்சி மாற்றம் ஏற்படும். ஆகவே புதிய அரசாங்கத்தின் கீழ் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக இருப்போம்.

தேசியகடன் ஒருபோதும் மறுசீரமைக்கப்படாது என மத்திய வங்கியின் ஆளுநர், நிதியமைச்சின் இராஜாங்க அமைச்சர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் தற்போது வெளிநாட்டு கடன்களை மறுசீரமைக்க வேண்டும் என குறிப் பிடப்படுகிறது. தேசிய கடன் மறு சீரமைக்கப்பட்டால் வங்கி கட்டமைப்பு நிச்சயம் பாதிக்கப்படும்.

தேசிய கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் அரசாங்கம் ஒட்டுமொத்த மக்களையும் ஏமாற்றுகிறது. அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகள் தொடர்பில் எதிர்வரும் மாதம் நாட்டுக்கு வருகை தரவுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளிடம் எடுத்துரைப்போம் என்றார்.




## பாடசாலை மாணவர்களுக்கு போதைபொருள்கள் விற்பனை

### கொழும்பில் ஒருவர் கைது

பாடசாலை மாணவர்களுக்கும் மேலதிக வகுப்பு மாணவர்களுக்கும் கஞ்சா கலந்த போதைப்பொருள் மற்றும் போதை மாத்திரைகளை விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

சந்தேக நபரிடம் காணப்பட்ட கஞ்சா கலந்த 25 போதைப்பொருள், 202 போதை மாத்திரைகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் மூலம் சம்பாதித்ததாக நம்பப்படும் 20,500 ரூபா பணமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

விசேட அதிரடிப்படை தலைமையக முகாமின் விசேட அதிரடிப்படை பிரிவு (கொழும்பு வலயம்) அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 92 ஆயிரம் இலங்கையர்கள் அகதிகளாகத் தமிழகத்தில்

### அமைச்சர் அலி சப்ரி தகவல்



அகதிகளாகப் பதிவு செய்து 92 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் தற்போது தமிழ்நாட்டில் தங்கியிருக்கின்றனர் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி உறுதிப்படுத்தியுள்ளார்.

நேற்று (செவ்வாய்க் கிழமை) நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர், 92 ஆயிரத்து 435 இலங்கையர்கள் அகதி முகாம்களுக்கு உள்ளோ அல்லது அதற்கு வெளியேயோ தமிழ்நாட்டில் தங்கியுள்ளனர் என்றார்.

தமிழகத்தில் தற்போது மொத்தம் 106 அகதிகள் முகாம்கள் இயங்கி வருகின்றன என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

தமிழக அகதிகள் முகாம்களில் தற்போது 19,046 குடும்பங்களைச் சேர்ந்த 58,435 நபர்கள் தங்கியிருக்கின்றனர் என அமைச்சர் உறுதிப்படுத்தினார்.

சுமார் 10,000 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 34,000 இலங்கையர்களும் மாநிலத்தில் வேறு இடங்களில் வசித்து வருகின்றனர் என அவர் கூறினார்.

இதேவேளை உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்த பின்னர் பெருமளவான இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர் எனவும் அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டார்.

## மாட்டுடன் மோதுண்டு இளைஞர் உயிரிழப்பு

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புளியம் பக்கலைப் பகுதியில் நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை 3.30 மணியளவில் கண்டாவளைப் பகுதியில் இருந்து புளியம்பக்கடை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளில் மாட்டுடன் மோதியதில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றும் ஒருவர் சிறு காயங்களுக்குள்ளானார்.

சம்பவ இடத்தில் இரண்டு கால்நடைகளும் இறந்துள்ளன. 18 வயதுடைய புளியம் பக்கடை பகுதியைச் சேர்ந்த இளைஞனே பலியாகியுள்ளார்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் மேலதிக விசாரணைகளுக்காகவும் பிரேத பரிசோதனைக்காகவும் கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.


Malaysia Tour
5 DAYS 4 NIGHTS
INCLUSION
» 04 Night stay in Kuala Lumpur
» Daily breakfast at hotel
» Return AirTicket
» Getting Highland tour with cable car
» City tour on arrival day
» Evening tour to twin tower
» Batu caves temple visit
» Putrajaya city tour
LKR 148,000.00
For Early Booking
Travel Date: 19 - 23 May 2023
Semba
Semba Services (Pvt) Ltd.
551A, Kasthuriyar Road ,Jaffna
+94 77 307 8799




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.05.2023இல் வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 26 செவ்வாய்க்கிழமை 09.05.2023 கதிர் 53


## உயிரிழந்த எம்.பிக்கு சபையில் அஞ்சலி

கடந்த ஆண்டு மே 9 இடம்பெற்றவன்முறைகளின் போது உயிரிழந்த நாடாளுமன்றஉறுப்பினர்அமரகீர்த்தி அத்துக்கோரள வினை நினைவுகூரும் வகையில் நாடாளுமன்றத் தில் ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

நாடாளுமன்றம் இன்று காலை 9.30 மணிக்குச் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தஷ்மையில் தொடங்கியது. அப்போது, உயிரிழந்த நாடாளுமன்ற உறுப்பினருக்குமௌனஅஞ்சலிஆளும்தரப்புமற்றும்எதிர்த் தரப்பு உறுப்பினர்களின் பங்கேற்புடன்செலுத்தப்பட்டது.

இதேவேளை, கடந்தவருடம் மே இடம்பெற்ற சம்பவங்களை நினைவுகூரும்

2



## பௌசியின் கட்சி உறுப்புரிமை பறித்தெடுப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌசியின் கட்சி உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் உப தலைவர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு கூட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நீட்டிக்கப்பட்ட நிதி வசதியின் கீழான ஏற்பாட்டை அமுல்படுத்துவதற்கான தீர்மானம்மீதானவாக்கெடுப்பைப் புறக்கணிப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்திருந்தது.

எனினும், வாக்கெடுப்பில் பங்கேற்று, அதற்கு ஆதரவாக பௌசி வாக்களித்திருந்தார்.

இந்நிலையிலேயே அவரின் கட்சி உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்டுள்ளது. (02)

# கிழக்கு எம்.பிக்களையும் பேச்சில் இணைக்க முடிவு

## தமிழ் அரசுக் கட்சியின் கோரிக்கையை இன்று ஏற்றார் அரசுத் தலைவர்

(ந.லோகதயான்)

தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினை மற்றும் நிரந்தர அரசியல் தீர்வு ஆகியன தொடர்பாக மே 11, 12, 13 ஆகிய மூன்று தினங்கள் ஆளும் தரப்புக்கும் தமிழ்த் தரப்புக்கும் இடையில் நடைபெறவுள்ள பேச்சில் வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் இணைத்துக்கொள்ள அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்று இணக்கம் தெரிவித்தார். அதன்படி கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பேச்சுக்கான அழைப்பை அனுப்பும்படி தனது அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார்.


தமிழ் அரசுக் கட்சிப் பிரதிநிதிகளுக்கும் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இன்று நடைபெற்ற சந்திப்பில் இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளது. அரசுத் தலைவர் செயலகத்தில் பிற்பகல் 3.30 மணி முதல் 4.30 மணி வரை ஒரு மணி நேரம் இந்தச் சந்திப்பு இடம்பெற்ற சந்திப்பில் இந்த இணக்கம் எட்டப்பட்டது.

தீர்வு தொடர்பான பேச்சுக்களில் வடக்கு மற்றும் கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தனித் தனியாகச் சந்திப்பதற்கு அரசுத் தலைவரால் எடுக்கப்பட்ட நடவடிக்கையைச் சுட்டிக்காட்டிய தமிழ் அரசுக் கட்சியினர்,

வடக்கு கிழக்கு உறுப்பினர்கள் அனைவரையும் ஒருசேர சந்தித்தே இந்த விடயம் குறித்துப் பேச வேண்டும் என்று வலியுறுத்தினர். சிறிது யோசித்த அரசுத் தலைவர் பின்னர் அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டார். பேச்சுக்கான அழைப்பை கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்புமாறு அதிகாரிகளுக்கு உடனடியாகவே உத்தரவிட்டார்.

இந்தச் சந்திப்பில் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தலைமையில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், இரா.சாணக்கியன், த.கலையரசன் ஆகியோருடன் தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை, சோ.சேனாதிராசாவும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார்.

2



ஆஸிக்குள் நுழைய முற்பட்ட

## 41 இலங்கையர்கள் இன்று நாடு கடத்தல்

சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியாவுக்குள் நுழைய முற்பட்ட 41 இலங்கையர்கள் இன்று காலை விசேட விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

குறித்த 41 இலங்கையர்களும் அந்நாட்டுப் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டுகிறிஸ்மஸ்தீவில் தங்க வைக்கப்பட்டிருந்த நிலையில், அந்நாட்டிலிருந்து நாடு கடத்தப்பட்டு இன்று காலை அனுப்பி வைக்கப்பட்டனர். ஆஸ்திரேலியாவுக்குச் சொந்தமான ஏ.எஸ்.வை. – 013 என்றவிமானத்தில் ஆஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவிலிருந்துதமதுபயணத்தை ஆரம்பித்த இவர்கள், இன்று காலை 9.40 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவர்களில்பெரும்பாலானோர் யாழ்ப்பாணம் மற்றும் வாழைச்சேனை பிரதேசங்களில் வசிப்பவர்கள் எனவும், இவர்கள் பல நாள் மீன்பிடிப் படகுகள் மூலம் கடல் கடந்து ஆஸ்திரேலியா சென்றுள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது. (02)

## மே 9 வன்முறைகளை விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு தேவை

### அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்து

நாட்டில் கடந்த ஆண்டு மே 9 இடம்பெற்ற வன்முறைகளால் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டமை மற்றும் மேலும் பல நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கப்பட்டமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அமைச்சர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்என்று, அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

வாராந்தஅமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வகையில்செய்தியாளர்களை இன்று சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்தஆண்டுஇதேநாள் உலக வரலாற்றில் ஜனநாயகத்திற்குக் கரும்புள்ளியை ஏற்படுத்திய நாளாகும். அரசமைப்புசபை,நிறைவேற்றதிகாரம், நீதிமன்றம் ஆகிய மூன்றும் ஜனநாயக நாட்டில் முக்கிய அம்சங்களாகும்.

இவற்றுக்கு அப்பால் கடந்த ஆண்டு மே 9 திட்டமிட்ட வகையில் நாட்டில் வன்முறைகள் இடம்பெற்றன. இதன் விளைவாக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார். மாத்திரமின்றி, 12 மணித்தியாலங்களுக்குள் 72 நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. அது மாத்திரமின்றி பிரதேச சபைகள் உள்ளிட்டவற்றின் 800 மக்கள் பிரதிநிதிகளின் சொத்துக்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டது.

உலக வரலாற்றில் இவ்வாறானதொரு நிலைமை இதற்கு முன்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஏற்படவில்லை. எனவே இது போன்ற சம்பவங்கள் இனியொரு சந்தர்ப்பத்தில் நாட்டில் பதிவாகாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் மே 9 வன்முறைகள் தொடர்பில் விசாரிப்பதற்கு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மனித உரிமைகளை மீறும் வகையிலான செயற்பாடுகளுக்கு எதிரான முழுமையான அதிகாரம் கொண்டதாக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் காணப்படவேண்டும் என்ற யோசனையையும் முன்வைத்துள்ளோம்–என்றார்.

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எதிராக அறிக்கை சபையில்



பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்கவை பதவிநீக்கம்செய்வதற்கான அறிக்கையொன்று ஆளும் தரப்பின் பிரதமகொறடா பிரசன்னரணதுங்கவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஜனக்க ரத்நாயக்க அவருக்கான அதிகாரவரையறையை மீறிச் செயற்படுகின்றார் என்ற குற்றச்சாட்டுக்கள் அடங்கலான அறிக்கையை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர பிரதம கொறடாவிடத்தில் கையளித்ததை அடுத்து அவர் அதனை நாடாளுமன்னத்தில் சமர்ப்பித்துள்ளார்.

முன்னதாக, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்கவை அப்பதவியிலிருந்து நீக்குமாறு அமைச்சர் காஞ்சன விஜேசேகர ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடத்தில் கோரியிருந்தார்.

அதனையடுத்து அமைச்சர் காஞ்சனவுக்கும், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்கவுக்கும் இடையில் தொடர்ச்சியான முரண்பாடுகள் நீடித்து வருகின்றன.

இறுதியாக, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டபோது அதற்கு பதில் வழங்கிய அவர் தொடர்ந்து வந்த நாட்களில் மின்சாரசபை இந்த ஆட்சியாளர்கள் தனியார்மயப்படுத்தலை நோக்கிக் கொண்டு செல்வதை அம்பலப்படுத்தியிருந்தார்.

## மத்திய வங்கி சட்டமூலம் மீதான விவாதம் சபையில் ஒத்திவைப்பு

### சஜித்தின் கோரிக்கைக்கு இணங்கினார் ரணில்



மத்திய வங்கி சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதை ஆளும் தரப்பு ஒத்திவைத்துள்ளது. இது தொடர்பாகவிடுக்கப்பட்ட கோரிக்கைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணங்கினார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமர்வு இன்றைய தினம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனதலைமையில்தொடங்கிய நிலையில் ஒழுங்குப் பிரச்சினையைஎழுப்பியஎதிர்க்கட்சித் தலைவர் இதனை நாடாளுமன்றில் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைமத்தியவங்கியின் நிதி விடயங்களில் அரசியல் தலையீடுஇல்லாமல்இருப்பதை நாமும் விரும்புகின்றோம். அந்தக்கொள்கையைநாமும் கொண்டிருக்கின்றோம்.

அந்த வகையில், நான் தொலைபேசி ஊடாக ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவைத் தொடர்புகொண்டேன்.இலங்கை மத்திய வங்கி சட்டமூலம் இரண்டாம் மதிப்பீட்டுக்காக சமர்பிக்கப்படுவதை தாமதப்படுத்துமாறு கேட்டுக் கொண்டேன்.

குறித்தசட்டமூலம்சம்பந்தமாககலந்துரையாடிவினைத்திறனான மாற்றங்களைச் செய்ய வேண்டியுள்ளது. அகவேபரந்துபட்ட கலந்துரையாடலொன்று அவசியமாக இருக்கின்றது. அதனை நோக்கி நாம் நகரவேண்டும் என்றும் கோரினேன்.

அதற்கு ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கஇணக்கம் தெரிவித்தார். அதற்காகநான் அவருக்குநன்றிகூறுகின்றேன். அத்துடன் இதனை நாடாளுமன்றத்தில் அறிவிக்குமாறும் என்னிடத்தில் கேட்டுக்கொண்டார் அதனடிபபடையில் அவ்விடயத்தினை இங்கு முன்வைத்துள்ளேன்–என்றார்.

இதனையடுத்து எழுந்த பிரதமர் தினேஷ் குணவர்த்தன, குறித்த விடயம் சம்பந்தமாக கலந்துரையாடல்களைச் செய்வதற்கு ஆளும் தரப்புத் தயாராகவுள்ளது. அத்துடன் அச்சட்டமூலத்தை விவாதிப்பதற்கான காலம் மீள

2

## 2022 மே 9 வன்முறைகள் குறித்து நாடாளுமன்றில் இன்று சர்ச்சை

கடந்த ஆண்டு மே 9 அன்று ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் சொத்துக்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பாக இன்று நாடாளுமன்றத்தில் ஆளும் மற்றும் எதிர்த் தரப்புகளுக்கு மத்தியில் கடும் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

நாடாளுமன்ற அமர்வு இன்றைய தினம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் தொடங்கி பிரதான விடயங்கள் நிறைவுக்கு வந்ததை அடுத்து, ஒழுங்குப் பிரச்சியையனை எழுப்பிய ஐக்கிய மக் கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுக்கும் தீர்மானங்கள் சிறந்தவை என்று சமூகத்தினுள் கருத்துக்கள் உள்ளன. ஆனால், கடந்த ஆண்டின் மே 9 என்ன நடந்தது? மீண்டும் அவ்வாறான நிலைமையொன்றை ஏற்படுத்தவா விளைகின்றார்கள்? என்றார்.

அதற்குப் பதிலளித்த ஆளும் தரப்பின் பிரதம கொறடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, எதிர்க்கட்சி உறுப்பினரின் கருத்துக்களுக்குள்ளேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுக்கும் தீர்மானங்கள் சரியானவைஎன்பதுஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எம்மைப்பொறுத்தவரையில் வன்முறைகளை செய்தவர்கள் கொடுங்கோலர்கள்தான். அவர்களை நியாயப்படுத்துவதற்கு இங்கு யாரும் வரவேண்டியதில்லை.

நாடாளுமன்ற உறுப்பினரைக் கொலைசெய்து அதில் மகிழ்ச்சி அடையும்நிலைமையில்இருக்கின்றதுஎதிர்க்கட்சி. இதுவொரு மோசமான வெளிப்பாடாகும்.வீடுகளைத்தீக்கிரையாக்கிஅதில் சந்தோசப்படுமளவிற்கு மனோநிலை காணப்படுகின்றது. எதிர்காலத்தில் அவ்விதமான செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது. அவ்விதமான செயற்பாடுகளை மேற்கொண்டவர்கள்கொடுங்கோலர்கள்தான்,. அதனை எதிர்க்கட்சி உறுப்பினர் ஆதரிப்பாராயின் அவரும் என்னுடைய மொழியில் கொடுங்கோலர்தான் என்றார்.

இதனையடுத்து, ஐக்கிய மக்கள் சக்தியின் மற்றொரு உறுப்பினரான, நளின் பண்டார, மே 9 வன்முறைகளை உருவாக்கியவர்கள் ஆளும் தரப்பினர்தான். அவர்கள் உருவாக்கிய வன்முறைகள் தான் அவர்கள் பக்கம் திரும்பியது என்பதை மறந்து விடக்கூடாது – என்றார்.

தொடர்ந்து, நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக் உரையாற்றும்போது, கடந்த மே 9 பெரமுனவின் அலுவலகங்கள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆகியோரின் வீடுகளை தீக்கிரையாக்குதல், சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை திட்டமிட்ட செயல். முன்கூட்டியே பட்டியல் தயாரிக்கப்பட்டே தாக்குதல் நடத்தப்பட்டது. அதனடிப்படையில் நூற்றுக்கணக்கான உறுப்பினர்களுக்கு சொந்தமான சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டுத் தீக்கிரையாக்கப்பட்டன.

அதேநேரம், பலர் அறிந்திருக்காத விடயத்தைக் கூறுகின்றேன். மே 10 ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களைக் கொண்டபட்டியலொன்று தயார்படுத்தப்பட்டிருந்தது. அந்தப் பட்டியலின் பிரகாரம், குறித்த உறுப்பினர்களுக்குச் சொந்தமான சொத்துக்களைச சீர்குலைப்பதே இலக்காக இருந்தது. இருப்பினும் அந்த விடயத்தினை அறிந்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல்குணரட்னவுடன் உரையாடியா கப்படையினரைக் களமிறக்கி வன்முறையில் ஈடுபடுவோர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தவும் அனுமதி அளிக்கப்பட்டது. அதனால் அதனால்தான் ரத்கம, அங்கொட, பிட்டகோட்டே ஆகிய பகுதிகளில் துப்பாக்கிச் சூடுகள் நடத்தப்பட்டன. அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்காவிட்டால், ஐக்கிய மக்கள் சக்தியின் அங்கத்தவர்களின் வீடுகள் ஆகக்குறைந்தது நூறாவது தீக்கிரையாக்கப்பட்டிருக்கும் – என்றார்.

அப்போதுஎழுந்த நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி, பிழையான தீர்மானங்கள் எடுக்கப்பட்டமையால்தான் மே 9வன்முறை நிகழ்ந்தது என்று கூறவே நான் விளைந்தேன். அதனை திரிவுபடுத்தி விட்டீர்கள் என்று பதிலளித்தார்.

அதனையடுத்து, சபாநாயகர், மஹிந்தயாப்பா அபேவர்த்தன,

2

# மன்னார் பாடசாலை அதிபர் நியமனத்தில் அதிகாரிகளின் செல்வாக்கு இருந்ததா?

## சர்ச்சையும் பதிலும்

(ந.லோகதயாளன்)

மன்னார் மாவட்டச் செயலர் அன்னம்மா ஸ்டான்லி டிமெல்லின் கணவர் என்பதால் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு தனது விதிமுறைகளை தானே மீறி அதிபர் நியமனம் வழங்கியுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது. ஆனால், 1 ஏபி தரப் பாடசாலைக்கு தரம் ஒன்று அதிபர் எவரும் விண்ணப்பிக்காத நிலையில், அந்தத் தரத்தில் இருந்த ஓர் அதிபர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார் என்று கல்வி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பிரச்சினை தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மன்னார் வங்காலை சென்.ஆன்ஸ் பாடசாலைக்கு மன்னார் மாவட்டச் செயலரின் கணவர் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் ஓய்வுபெறுவதற்கு இன்னமும் 5 மாதங்களே உள்ளன. இந்தநிலையில்வடக்கு மாகாண கல்வி அமைச்சு அவருக்கு அதிபர் நியமனத்தை வழங்கியுள்ளது.

புதிதாக அதிபராக நியமிக்கப்படுபவர் தான் நியமிக்கப்படும் பாடசாலையில், மூன்று வருடங்கள் கட்டாயம் சேவையாற்ற வேண்டும் என்று நிபந்தனை போடும் வட மாகாண கல்வியமைச்சு, மன்னார் மாவட்டச் செயலரின் கணவருக்காக, நெறிமுறைகளை மாற்றியமைப்பது அநீதியானது.

மன்னார் மாவட்டச் செயலர் தனது பதவியை வைத்துச் இந்தக் காரியத்தைச் செய்ய எடுத்த முயற்சிக்கு வட மாகாண கல்வியமைச்சும் உடந்தையாகச் செய்யப்பட்டதை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது. குறித்த முறையற்ற அதிபர் நியமனம் நிறுத்தப்பட்டு பொருத்தமான முறையில் நியமனம் வழங்கப்படவேண்டும்.

இது சீர்செய்யப்படவில்லையாயின், பாடசாலைகளில் அதிபராக நியமிக்கப்படும் ஒருவர் மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக அதே பாடசாலையில் கடமையாற்ற வேண்டும் என வட மாகாண கல்வியமைச்சு விதித்து வரும் நிபந்தனை இலங்கை ஆசிரியர் சங்கத்தால் கேள்விக்கு உட்படுத்தப்படும்-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் பதிலளித்த அதிபராக நியமிக்கப்பட்டுள்ளவரான ஸ்டான்லி டிமெல் தெரிவித்ததாவது:

ஆசிரியசேவையில் 34 வருட சேவையினையும் அதிபர் சேவையில் 20 வருட அனுபவத்தையும் கொண்டிருக்கும் எனக்கு கடந்த 5 ஆண்டுகளாக இழைக்கப்பட்ட அநீதிக்குக் குரல் கொடுக்காத ஆசிரியர் சங்கம் தற்போது ஓர் 1 ஏபி பாடசாலைக்குத் தரம் 3 ஐச் சேர்ந்த ஒருவரை அதிபராக நியமிக்கும் சூழ்ச்சிக்குத் துணை போகும் வகையில் செயல்படுகின்றது.

நான் அதிபர் சேவை தரம் ஒன்றைச் சேர்ந்தவன். சென். ஆன்ஸ் 1 ஏ.பி பாடசாலையின் அதிபர் ஓய்வு பெற்றுச் சென்றதால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்ப என்னை அழைத்தார்கள். நானும் ஏற்றுக்கொண்டேன். அப்படித்தான் இந்த நியமனம் வழங்கப்பட்டது.

இந்த நியமனம் வழங்கப்படுவதற்கு முன்பாக இதே பாடசாலையின் அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டபோது எவருமே விண்ணப்பிக்கவில்லை. நானும் போக மறுத்தால் அதிபர் சேவை தரம் 3ஐச் சேர்ந்த ஒருவரை நியமிக்க சிலர் மேற்கொள்ளும் சூழ்ச்சி வெற்றிபெற்றிருக்ககும். இந்தச் சூழ்ச்சிக்கு ஆசிரியர் சங்கமும் இரையாவது வேதனைக்குரியது – என்றார்.

நான் மாவட்டச் செயலரின் செல்வாக்கினால் இந்தப் பதவியைப் பெற்றுக்கொண்டேன் என்று கூறுபவர்கள் மாகாணத்தின் மூத்த அதிகாரி ஒருவரின் சகோதரனான தரம் 3ஐ சேர்ந்த அதிபருக்கு இந்த 1 ஏ.பி பாடசாலை அதிபர் பதவியை வழங்கவே இவ்வாறு பொய்க் குற்றச்சாட்டைக் கூறுகிறார்கள் என்று தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கு என்ன பதில் கூறப்போகிறார்கள் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

# இடுப்புக்குள் மறைத்துத் தங்கம் கடத்த முற்பட்டவர் கைதானார்!



15 கோடியே 25 லட்சம் ரூபா பெறுமதியான 7 கிலோ நிறை கொண்ட தங்கத்தை சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வந்த ஒருவரை பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் குழுவொன்று கட்டுநாயக்க விமானநிலையத்தைவிட்டுவெளியேறும்போது கைது செய்துள்ளது.

43 வயதுடைய வர்த்தகரான இவர், கொழும்பு மருதானை பிரதேசத்தில் வசித்து வருவதுடன் அடிக்கடி வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்பவர் எனவும் தெரிய வந்துள்ளது.

சந்தேக நபர் நேற்று (திங்கட்கிழமை) காலை 09.20 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

விமான நிலையத்தில் அனைத்து விசாரணைகளையும் முடித்துவிட்டு அங்கிருந்துவிமானநிலையத்துக்குவெளியே செல்லும்போதே இவர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபர் தனது இடுப்பு பகுதியில் 8 பொட்டலங்களாக மறைத்து வைத்திருந்த 4 கிலோ 400 கிராம் எடையுடைய 42 தங்க பிஸ்கட், அரை தங்க பிஸ்கட் மற்றும் 2 கிலோ 600 கிராம் எடை கொண்ட நகைகளை மறைத்து வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

சந்தேக நபர் மேலதிக விசாரணைக்காக விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## மத்திய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரையறுக்கப்படவுள்ளது. அதற்கிடையில் நாடாளுமன்ற குழுநிலையில் குறித்த விடயத்தினை ஆராய முடியும் –என்றார்.

இலங்கை மத்திய வங்கி சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் மே 11 மு.ப.9.30 மணி முதல் பி.ப.6.00 மணி வரை இடம்பெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 2022 மே ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீங்கள் புதிதாக பிரச்சினையொன்றையும் கிளப்பாதீர்கள் – என்றார்.

அப்போது, மீண்டும் எழுந்த ஆளும் தரப்பு பிரதம கொறடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, எதிர்க்கட்சி உறுப்பினரே, உங்களின் சகோதரர் கைது செய்யப்பட்டார். மறந்து விட்டீர்களா? அவர் அரசகலயவுடன் தொடர்புபட்டமையால்தான் கைது செய்யப்பட்டார். இதனால்தான் நீங்கள் அரகலயவை நியாயப்படுத்த முயல்கின்றீர்கள். அவ்வாறு செய்யாதீர்கள். வீணாக முரண்படாதீர்கள். அமைதியாகக் கலந்துரையாடுவதற்கு வாருங்கள் – என்றார்.

## உயிரிழந்த ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வகையில் ஆர்ப்பாட்டக்கள் போராட்டங்கள் இடம்பெறுவதைத் தடுக்கும் வகையில், கொழும்பின் பல இடங்களுக்குள்ளும் நுழைவதை பிரவேசிப்பதைத் தடுக்கும் வகையில் கோட்டை நீதிவான் திலின கமகே உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் விடுக்கப்பட்ட கோரிக்கையை பரிசீலித்த நீதிவான் இந்த உத்தரவை பிறப்பித்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், நிதியமைச்சு மற்றும் அலரி மாளிகைக்குள் ஆர்ப்பாட்டக்காரர்கள் நுழைவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பொலிஸாரின் தீவிரமான கண்காணிப்பும் கொழும்பு நகரெங்கும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## கிழக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னதாக இந்த மூன்று நாள் பேச்சுக்கு அரசுத் தலைவர் செயலகத்தால் வடக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமே அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. வடக்கு, கிழக்கு உறுப்பினர்களைத் தனித் தனியாக இவ்வாறு அரசுத் தலைவர் சந்திக்கும் முடிவுக்கு முதலில் ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் முதலில் எதிர்ப்புத் தெரிவித்தார். கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அழைக்கவில்லை என்றால் இந்தப் பேச்சில் கலந்துகொள்ளப் போவதில்லை என்று அவர் அறிவித்தார்.

அதைத் தொடர்ந்து நடந்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் கூட்டத்திலும் இதே முடிவு வலியுறுத்தப்பட்டது.

அரசுத்தலைவருடனான பேச்சுத்தொடர்பில் திங்கட்கிழமை அறிக்கைவிட்ட தமிழ் அரசுக் கட்சியும் இதே கோரிக்கையை வலியுறுத்தியிருந்தது. தென் கயிலை ஆதீனம், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆகியனவும் இதே நிலைப்பாட்டை வலியுறுத்தியிருந்தன. (02)

# கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு



கல்முனை பிராந்தியத்தின் முன்னணி அமைப்புக்களில் ஒன்றான கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் வருடாந்த ஒன்றுகூடல், புதிய நிர்வாக தெரிவு மற்றும் ரீசேட் அறிமுகம் என்பன சாய்ந்தமருதில் அமைந்துள்ள ஒன்றியத்தின் தலைமைக் காரியாலயத்தில் தவிசாளர் பொறியியலாளர் யூ.கே.எம். முஸாதிக் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக ஒன்றியத்தின் அங்கத்தினர்களாக இருந்து மரணித்தவர்களுக்காகவும் சுகயீனமுற்றிருக்கும் தோழர்களின் ஆரோக்கியத்துக்காகவும் பிராத்தனைகள் இடம்பெற்றன. தொடர்ந்து

நடப்பாண்டுக்கான தவிசாளார் பொறியியலாளர் யூ.கே.எம். முஸாதிக், தனது உரையின்போது ஒன்றியத்தின் கடந்து வந்த பாதைகள்; அங்கு இடம்பெற்ற முன்னெடுப்புக்கள், எதிர்காலத்தில் கைக்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் போன்ற விடயங்களை விரிவாக எடுத்துக் கூறினார்.

புதிய தவிசாளர் பொறியியலாளர் எம்.எம். நஸீரால் ஒன்றியத்துக்கு ஒருதொகை ரீசேட்கள் வழங்கப்பட்டு; அவைகள் அறிமுகம் செய்யப்பட்டதுடன் யூ.கே.எம். முஸாதிக்கின் கரங்களால் அங்கத்தினர்களுக்கு அவைகள் வழங்கி வைக்கப்பட்டன. பின்னர் 2023ஃ2024 ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

அதனடிப்படையில் தவிசாளராக பொறியியலாளர் எம்.எம். நஸீர், நிர்வாகப் பணிப்பாளராக பிரதம தபாலதிபர் யூ.எல்.எம். பைஸர், நிதிப் பணிப்பாளராக ஓய்வுநிலை அமைச்சின் மேலதிக செயலாளர் ஏ.எல்.எம். சலீம், உதவித் தவிசாளராக எம்.எம். ஜுனைடீன், திட்ட அமுலாக்கல் பணிப்பாளராக ஐ.எல். நயீம், ஊடகப் பணிப்பாளராக சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.வை. அமீர், சட்ட ஆலோசகராக யூ.கே.எம். முஸாஜித் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் பிரதி நிர்வாகப் பணிப்பாளராக எம்.எம். உதுமாலெப்பை, பிரதி நிதிப் பணிப்பாளராக ஏ.எல்.எம். அன்வர், பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக ஐ. அலியார், யூ.எல்.எம். ஹனிபா, எம்.ஏ.சீ.எல். நஜீம், ஏ. பரீட், ஏ.எம் றஸ்மி, எம்.ஏ. றபீக் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இங்கு உரையாற்றிய புதிய தவிசாளர் பொறியியலாளர் எம்.எம். நஸீர், தன்னை ஒன்றியத்தின் தவிசாளராக தெரிவு செய்தமைக்காக அங்கத்தினர்களுக்கு நன்றி தெரிவித்தமையுடன் எதிர்காலத்தில் மேற்கொள்ள திட்டமிட்டுள்ள பல்வேறு திட்டங்கள் தொடர்பிலும் எடுத்துக் கூறினார். இறுதியாக நிர்வாகப் பணிப்பாளர் பிரதம தபாலதிபர் யூ.எல்.எம். பைஸரின் நன்றி உரையுடன் நிகழ்வு முடிவுக்கு வந்தது.

# காதலனுடன் வசித்து வந்த பெண் கழுத்தறுத்துக் கொடூரக் கொலை

## முன்னாள் காதலியும் சகோதரனும் கைது

வாடகைவீடொன்றில்கட்டடப் பணியாளர் ஒருவருடன் வசித்து வந்த காதல்மனைவிஎனக்குறிப்பிடப்படும் பெண்ணொருவரைக் கொலை செய்துவிட்டுத் தப்பிச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரனும் சகோதரியும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் பாதுக்கை, வட்டரெக்கப் பகுதியில் இன்று காலை இடம்பெற்றுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சகோதரர்களில் பெண் சந்தேகநபர் குறித்த கட்டடப் பணியாளரின் முன்னாள் மனைவி என்றும், மற்றயவர் அவரின் தம்பி என்றும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பெண் சந்தேகநபர் கட்டடப் பணியாளரை விவாகரத்து செய்து சுமார் மூன்று வருடங்களாகின்றன என்றும், அதனால் தான் வேறு ஒரு பெண்ணுடன் வாழ்ந்து வந்தார் என்றும் கட்டடப் பணியாளர் வழங்கிய சாட்சியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இன்று காலை குறித்த கட்டடப் பணியாளர் வேலைக்காக வீட்டை விட்டு வெளியேறிய பின்னர் சந்தேகநபர்களான முன்னாள் மனைவியும், அவரது தம்பியும், வீட்டுக்குச் சென்று கொலையுண்ட பெண்ணிடம் பேசி, வீட்டுக்கு வெளியே அழைத்து வந்து கூரான கத்தியால் அவரின் கழுத்தை அறுத்துக் கொலை செய்துள்ளனர் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

வலஸ்முல்ல, கட்டுவன, அலுபொத்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்த விவாகரத்துப் பெற்ற 52 வயதுடைய பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார். (02)

# மினுவாங்கொடைப் பகுதியில் 15 வயது சிறுமியைக் கடத்திய முன்னாள் காதலன்

மினுவாங்கொடை, ஓபாத பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயதுடைய சிறுமி ஒருவர் கடத்தப்பட்டுள்ளார் என்று வெல்லவாய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

ஓபாத பிரதேசத்தில் வசிக்கும் இளைஞர் ஒருவரால் குறித்த சிறுமி கடத்தப்பட்டுள்ளார் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுமிக்கும் இளைஞருக்கும் இடையே காதல் தொடர்பு இருந்து வந்தது எனவும், சிறுமி அந்த உறவை முறித்துக்கொண்டதால் குறித்த இளைஞர் தொடர்ந்தும் அவரை மிரட்டி வந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் காரணமாக சிறுமியை மொனராகலை பகுதியில் உள்ள உறவினர் வீட்டில் தங்க வைக்க குடும்பத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்தநிலையில் குறித்த இளைஞர், சிறுமி தங்கவைக்கப்பட்டிருந்த உறவினரின் வீட்டுக்குச் சென்று சிறுமியை வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றுள்ளார் எனவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில்வெல்லவாயபொலிஸார்விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் எனவும், இதுவரை சிறுமி தொடர்பில் எவ்வித தகவலும் தெரியவரவில்லை எனவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (02)

# கல்வியியற் கல்லூரி கிறிஸ்தவ, முஸ்லிம் மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதிக்கான மையத்தால் தீர்வு!

கல்வியியற் கல்லூரிகளில் கிறிஸ்தவ மற்றும் இஸ்லாம்பாடத்துக்குமாணவர்களை உள்ளீர்ப்பதில் கிறிஸ்தவ, முஸ் லிம் மாணவர்களுக்கு இளைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக நீதிக்கான மையம் மேற்கொண்டசட்ட நடவடிக்கையால் கல்வி அமைச்சு தீர்வை வழங்கியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நீதிக்கான மையம் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் கடந்த 08.02.2023 ஆம் திகதி அதன் தலைவர் சட்டத்தரணி ஃபி எச்.இஸ்மாயில், செயலாளர் கலாநிதி றியாத் ஏ.மஜீத் ஆகியோர் கையொப்பமிட்டு முறைப்பாடொன்றைப் பதிவு செய்திருந்தனர்.

அம்முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

கடந்த பல வருடங்களாக கிறிஸ்தவ, இந்து, இஸ்லாம்சமய பாடநெறிகளுக்கு கல்வியியற் கல்லூரிகளுக்கு சமமான எண்ணிக்கை கொண்ட மாணவர்கள் உள்ளீர்க்கப்படுவது வழக்கமாக இருந்து வந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில்தமிழ்மொழிமூலமாக இந்து,கிறிஸ்தவ,மற்றும்இஸ்லாம் பாட நெறிகளுக்கு கல்வியியற் கல்லூரிகளில் 30 மாணவர்கள்உள்ளீர்ப்புசெய்யப்பட்டனர். 2016, 2017 ஆண்டுகளிலும் மூன்று பாடநெறிகளுக்கு சமமானவர்கள் உள்வாங்கப்பட்டிருந்தனர்.

2022 ஆம் ஆண்டு கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர்களை உள்வாங்கும்போது இந்து சமய பாடத்திற்கு 40 (2019, 2020) மாணவர்களையும், இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ பாடநெறிகளுக்கு தலா 20 மாணவர்களை மாத்திரம் உள்வாங்க இருப்பதாக வர்த்தமானியில் கல்வி அமைச்சு அறிவித்தல் வழங்கியுள்ளது.

இந்த வர்த்தமானியை ரத்து செய்து இஸ்லாம், கிறிஸ்தவ பாடநெறிகளுக்கு மாணவர்களை கூடுதலாக உள்வாங்குமாறு மனித உரிமை ஆணைக்குழுவில் நீதிக்கான மையம் முறைப்பாடொன்றை பதிவு செய்திருந்தது.

இம்முறைப்பாட்டை ஏற்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழு மேற்கொண்ட துரித நடவடிக்கை

காரணமாககல்விஅமைச்சு குறித்த இரு பாடநெறிகளுக்கும் கூடுதல் மாணவர்களை உள்ளீர்ப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக நீதிக்கான மையத்துக்கு அறிவித்துள்ளது.




இது தொடர்பில் கல்வி அமைச்சு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவுக்கு வழங்கியுள்ள பதிலில் சமூக நிறுவனங்கள் கல்வியியலாளர்களின் கோரிக்கைக்கு ஏற்ப கல்வியியற்கல்லூரிகளில் இஸ்லாம், கிறிஸ்தவ பாடங்களுக்கான மாணவர்களின் எண்ணிக்கை இஸ்லாம் பாடத்திற்கு 60 ஆகவும் கிறிஸ்தவ பாடத்துக்கு 34 ஆகவும் அதிகரிக்க தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

அநீதி இளைக்கப்பட்ட கிறிஸ்தவ, முஸ்லிம் மாணவர்களுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுத்த நீதிக்கான மையத்திற்கு கிறிஸ்தவ, முஸ்லிம் மாணவர்கள், கல்வியியலாளர்கள், பொதுமக்கள் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

நீதிக்கான மையம், முஸ்லிம் மாணவர்களிடமிருந்து ஞானசார தேரரின் சிபாரிசின் பேரில் பறிக்கப்பட்ட இஸ்லாம் பாட புத்தகத்தை மீள பெற்றுக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# அத்துருகிரிய இரட்டைக் கொலைச் சம்பவம்: சந்தேக நபரிடம் அடகு பற்றுச்சீட்டும் மீட்பு!

அத்துருகிரியபிரதேசத்தில்அண்மையில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை பொலிஸார் நேற்று (திங்கட்கிழமை) கொலைகள் இடம்பெற்ற இடத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

குறித்த சந்தேக நபர் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். 29 வயதான சந்தேக நபர் மொரட்டுவை கொரலவெல்ல பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரிடம் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர், உயிரிழந்த பெண்ணிடம் திருடப்பட்ட சுமார் 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் அடகு வைக்கப்பட்ட பற்றுச்சீட்டும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

கடந்த 2 ஆம் திகதி மாலை அத்துருகிரிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொடகம வீதி அத்துருகிரிய பிரதேசத்தில் அமைந்துள்ள மரக்கடை ஒன்றின் உரிமையாளர் ஒருவர் கடையின் அலுவலக அறைக்குள் வைத்து கொடூரமான முறையில் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மேலும், மரக்கடையில் பணியாற்றிய அத்துகிரிய பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயதுடைய நபரும் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டிருந்தார்.

குறித்த நபர் தாக்கப்பட்டு பலத்த காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவரும் கடந்த 6 ஆம் திகதி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# களுத்துறையில் நிர்வாணமாக மீட்கப்பட்ட மாணவியின் சடலம்!

## தம்பதி உட்பட மூவருக்கு விளக்கமறியல்

களுத்துறையில் 16 வயதும மாணவியின் மரணம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட தம்பதியரையும் மற்றுமொருவரையும் களுத்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதன் பின்னர் எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

களுத்துறை நகரின் ரயில் பாதையை அண்மித்த பகுதியில் உள்ள அறைகள் வாடகைக்கு விடப்படும் ஐந்து மாடி கட்டடத்தின் மூன்றாவது மாடியிலிருந்து வீழ்ந்து உயிரிழந்த பாடசாலை மாணவியின் நிர்வாணமான சடலம் கடந்த 6 ஆம் திகதி பொலிஸாருக்கு கிடைத்த சில தகவல்களின்படி மீட்கப்பட்டிருந்தது.

உயிரிழந்த மாணவி களுத்துறை நாகொட பிரதேசத்தில் வசிக்கும் 16 வயதுடையவர் எனவும், சடலம் உயிரிழந்தவரின் பெற்றோரால் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தங்கோவிட்ட இறப்பர் தொழிற்சாலை தீ பரவல்!

கொழும்பு – கண்டி வீதியை அண்மித்த தங்கோவிட்ட பிரதேசத்தில் இயங்கி வரும் இறப்பர் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட திடீர் தீயால் தொழிற்சாலைக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாக தங்கோவிட்ட பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவராத நிலையில், அப்பகுதியின் பாதுகாப்பு கருதி மின்சாரத்தை துண்டிக்க பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டனர்.

இந்த தீ பரவல் காரணமாக எவருக்கு பாதிப்பு ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# டெங்கு ஒழிப்பு சிரமதானங்கள்!






நாட்டில் டெங்கு பெருக்கம் அதிகரித்திருப்பதுடன் மிக நீண்டகால விடுமுறைகளில் பாடசாலைகள் இருந்தமையால் மாணவர்களுக்குச் சுகாதாரமான சுற்றுச்சூழலை உருவாக்குவோம் எனும் தொனிப்பொருளுக்கமைவாக கல்முனை கல்வி வலய கல்முனை நகர் இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயத்தில் டெங்கு ஒழிப்புச் சிரமதானம் பாடசாலை அதிபர் எம்.ஜி.எம். றிசாத் தலைமையில் இடம்பெற்றது.

இந்தச் சிரமதான நிகழ்வில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எம்.அறுஸ்தீன் அவர்களின் பிரிவுக்கு உட்பட்ட சமுர்த்திப் பயனாளிகள் கலந்துகொண்டனர். அத்தோடு பாடசாலை அபிவிருத்திகுழு உறுப்பினர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களும் கலந்து இந்தப் பணியினைச் சிறப்பாக செய்து முடித்தனர்.

# நுவரெலியா நகரை சுற்றுலா தளமாக மாற்ற சிறப்புக்குழு!





ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பிரகாரம் நுவரெலியா நகரை சுற்றுலா தளமாக மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக சிறப்பு குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தலைமையில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் பங்கேற்புடன் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்ற கூட்டத்திலேயே இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன், நுவரெலியா மாவட்ட அரச அதிபர், நகர அபிவிருத்தி அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

இதன்போது நுவரெலியா நகரை சிறப்பானதொரு சுற்றுலாத் தளமாக மாற்றுவதற்குத் தேவையான விடயங்கள் தொடர்பில் கருத்துகளும், ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன. இவை தொடர்பில் ஆராய்ந்து, உரிய ஆய்வுகளின் பின்னர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென குழுவொன்றும் அமைக்கப்பட்டது.

சுமார் 10 இற்கும் மேற்பட்டவர்களை உள்ளடக்கிய இந்தக் குழுவில் சுற்றுலாத்துறை, பாதுகாப்பு, நிர்வாகம், திட்டமிடல் துறைசார் அதிகாரிகள் இடம்பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## எழும் கேள்விகள்

அரகலயவின் போராட்டத்தின் பக்கவிளைவான வன்முறைகளின் ஓராண்டு நிறைவு நாள் இன்று. இதே நாளில் ஓராண்டுக்கு முன்னர் நாடு பெரும் கலவரத்திற்குள் சிக்கிக் கொண்டிருந்தது. மக்கள் பிரதிநிதிள் என்று சொல்லப்பட்ட அரசியல்வாதிகள் வெளியே தலைகாட்ட முடியாத நெருக்கடியான ஓர் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள், சொத்துக்கள் தேடித் தேடி எரித்து நாசமாக்கப்பட்டன. பெரும் அச்சுறுத்தலான நிலை ஒன்று காணப்பட்டது.

கொழும்பு, காலிமுகத் திடலில் நடந்துகொண்டிருந்த அரகலய போராட்டத்தின் மீது அப்போதைய தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவின் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்தே இந்த வன்முறைகள் வெடித்தன. அது பின்னர் பல இடங்களுக்கும் பரவியது. ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள், சொத்துக்கள் இலக்கு வைக்கப்பட்டுத் தாக்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் இந்த வன்முறைகளில் கொல்லப்பட்டார்.

வன்முறைகள், உயிரிழப்புக்கள், சொத்தழிவுகளை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது. அவை தண்டிக்கப்படவேண்டிய குற்றங்கள். இந்தக் குற்றங்களைப் புரிந்தவர்களைத் தேடி இனங்கண்டு நடவடிக்கை எடுக்க வேண்டியது சட்டம் ஒழுங்குக் காவலர்களின் தலையாய கடமை. காலி முகத் திடல் அரகலய போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களில் பலர் மீது காவல்துறையினர் வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளனர். அதுபோன்றே நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள், சொத்துக்களை அழித்தவர்கள் மீதும் காவல்துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். அவர்களில் பலரைக் கைது செய்து நீதிமன்றக் காவலில் வைத்ததுடன் அவர்கள் மீது வழக்கும் பதிவு செய்துள்ளனர். குற்றங்கள் ஈவிரக்கமின்றிக் கட்டுப்படுத்தப்படுவதுடன் குற்றவாளிகள் தண்டிக்கப்படவும் வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து யாருக்கும் இருக்க முடியாது. எனவே வன்முறைகள் தொடர்பில் காவல்துறையினர் தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம்.

ஆனால், அதையெல்லாம் தாண்டி இந்த வன்முறைகள் தொடர்பாக அரசுத் தலைவர் ஆணைக்குழு ஒன்றை நியமிக்கவேண்டும் என்று அமைச்சர்கள் அரசுத் தலைவரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்கள் என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன கூறுகின்றார். அத்தகைய அணைக்குழு ஒன்றின் விசாரணைக்கு என்ன அவசியம் வந்தது? ஆளும் தரப்பாக இப்போதும் இருப்பவர்களின் சொத்துக்களுக்கே சேதங்கள் ஏற்படுத்தப்பட்டன. அதாவது காவல்துறையினரைக் கட்டுப்படுத்தக்கூடிய இடத்தில் இருப்பவர்கள், எதற்காக அரசுத் தலைவர் ஆணைக்குழுவைக் கோருகின்றார்கள்? தமது ஆளுகையின் கீழ் இருக்கும் காவல்துறையினரின் விசாரணையில் நம்பிக்கையில்லையா? திருப்தியில்லையா?

இன்று நாடாளுமன்றத்தில் இந்த வன்முறைகள் தொடர்பாக இடம்பெற்ற விவாதங்களில் ஓர் அரசியல் கட்சியினை இந்த வன்முறைகளோடு தொடர்புபடுத்தும் விதத்தில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. திட்டமிட்டுப் பட்டியல்படுத்தியே ஆளும்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் தாக்கப்பட்டன , மறுநாள் வைகாசி 10 அன்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளைத் தாக்கவும் அவர்கள் திட்டமிட்டிருந்தனர். ஆனால் பாதுகாப்புத் தரப்பினர் தடுத்து நிறுத்திவிட்டனர் என்றும் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்திருக்கிறார். இதுபோன்று ஓர் அரசியல் தரப்பு மீது வன்முறைகளுக்கான பழியைப் போட்டு அந்தக் கட்சியை அரசியல் ரீதியாக முடக்குவதற்குத்தான் இந்த ஆணைக்குழு நாடகம் தொடங்கப்படுகின்றதா?

என்கிற கேள்விகள் எழுகின்றன. திட்டமிட்ட வன்முறைகள் நிறுத்தப்படவேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும். அதற்காக அரசியல் எதிரிகளைப் பந்தாடுவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பழிவாங்குவதற்குமாக இந்த விவகாரம் ஆளும் தரப்பினரால் பயன்படுத்தப்படக்கூடாது. அதற்கு ஒருபோதும் அனுமதிக்கப்படாது.

## மூவின மக்கள் மத்தியிலும் இனவேறுபாடுகளை அழிக்க முயன்றபெண்மணி அனுராதா யஹம்பத்!

### எம். பைசல் இஸ்மாயில் புகழாரம்

ஒரு நாட்டில் சமாதானத்தின் முக்கியத்துவத்தை நன்கு புரிந்துகொண்ட எமது ஆளுநர் திருமதி அனுராதா யஹம்பத், வாழும் குறிப்பிட்ட மக்களின் உள்ளங்களில் உள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் இன வேறுபாடுகளை முற்றாக அழிப்பதில் பெரும் முயற்சிகளை மேற்கொண்ட துணிவும் பெருமையும் கொண்ட பெண் மணி.

- இவ்வாறு புகழாரம் தெரிவித்துள்ளார் திருகோணமலை குரல் வலையமைப்பின் சார்பில் எம். பைசல் இஸ்மாயில். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

கிழக்கு மாகாணத்தில் இதற்காக அவர் செய்த சேவை விலைமதிப்பற்றது. மேலும், நாட்டில் ஆபத்தான கொரோனா தொற்றுநோய்களின்போது இந்த மாகாணத்துக்கு அவர் ஆற்றிய சேவையும் மகத்தானது. இந்த நேரத்தில்தான் அவருடைய தேசிய சமத்துவத்தைப் பார்த்தோம். மதம், இனம், ஜாதி, வேறுபாடின்றி அனைவரும் மனிதர்கள் என்ற உயர்ந்த சமூக உணர்வோடு அவர் ஆற்றிய சேவையைப் பாராட்டியே ஆகவேண்டும்.

மேலும், கனிவான மனித இதயத்துடனும் மனசாட்சியுடனும் சேவையாற்றிய உன்னதமான, கண்ணியமான, துணிச்சலான பெண்மணி. கிழக்கு மாகாண மக்களுக்கு அவர் ஆற்றிய சேவைகளை எவராலும் மறக்க முடியாது.

எனவே, கிழக்கு மாகாணத்தில் அவரது சேவை எங்களுக்குத் தொடர்ந்து தேவைப்படுகிறது. ஜனாதிபதி அவர்களே, இவரை இந்த மாகாணத்தின் ஆளுநராக நியமிப்பதற்கு திருகோணமலை குரல் சமூக வலைப்பின்னலில் இருந்து நாங்கள் உங்களுக்கு மிகவும் அன்பாக இருக்கிறோம். - என்று தெரிவித்தார்.

## இலங்கை சாரணர் சங்கத்தினரை லண்டனில் சந்தித்தார் ஜனாதிபதி



நாட்டின் எதிர்கால தலைமைத்துவத்தை பொறுப்பேற்க இளைஞர்கள் எவ்வாறு தயாராக இருக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஐக்கிய இராச்சிய சாரணர் இயக்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட முடிசூட்டு விழா முகாமில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்ற இலங்கை சாரணர் இயக்கத்தின் சிரேஷ்ட சாரணர்கள் மற்றும் பெண் சாரணர்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் இடையிலான சந்திப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை லண் டனில் இடம்பெற்றுள்ளது. இதன் போதே ஜனாதிபதி இவ்வாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

முடிசூட்டுவிழாவுக்கு இலங்கை சாரணர் இயக்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி லினி பெரேரா, அரிதா பண்டார, அசேல பண்டார மற்றும் சரித் பெர்னாண்டோ ஆகிய சாரணர்கள் கலந்துகொண்டனர்.

அவர்களுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, உலகளாவிய காலநிலை மாற்றம் உள்ளிட்ட தேசிய மற்றும் சர்வதேச நலன்களில் தீவிரமாக ஈடுபடுமாறு சாரணர்களை ஊக்குவித்துள்ளார்.

இலங்கை சாரணர் இயக்கத்தின் பிரதம ஆணையாளர் சட்டத்தரணி ஜனபிரித் பெர்னாண்டோவின் வேண்டுகோளுக்கு இணங்க இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## இலங்கை வங்கி கிளை கிண்ணியாவில் திறப்பு!







இலங்கை வங்கி வாடிக்கையாளர்களுக்கு விரிவான மற்றும் பயனுள்ள சேவையை வழங்குவதற்காக, நவீன டிஜிற்றல் தொழில்நுட்பத்துடன் கூடிய இலங்கை வங்கியின் கிண்ணியா கிளை நேற்று (திங்கட்கிழமை) திறந்துவைக்கப்பட்டது.

கலை கலாசார நிகழ்வுகளுடன் பிரதம அதிதிகள் பெரும் அமோக வரவேற்பளிக்கப்பட்டதுடன் நாடாவை வெட்டி உத்தியோகபூர்வமாகக் கிளை திறந்து வைத்தனர்.

இதற்கு முதல், புஹாரி சந்திக்கு அருகல், அமையப்பெற்ற இலங்கை வங்கி, தற்போது இல 100, மட்டக்களப்பு ,திருகோணமலை பிரதான வீதி தோனா கடற்கரை பூங்காவுக்கு முன்னால் அமைய பெற்றுள்ளது.

வாடிக்கையாளர்களுக்கு தரமான சேவையை வழங்கும் நோக்குடனும் பல சேவைகளை ஒரே சமயத்தில் வழங்கும் நோக்குடனும் இந்த வங்கியின் செயற்பாடுகள் விரிவாக்கப்பட்டுள்ளன. இதன் போது பணத்தை வைப்பிலிட்ட வாடிக்கையாளர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் , இலங்கை வங்கியின் (கிழக்கு மாகாணம்) பிரதிப் பொது முகாமையாளர் பியால் டி சில்வா, உதவிப் பொது முகாமையாளர் செல்வி பெ.சி.மார்ட்டின், கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.ஹனி, பிரதேச முகாமையாளர் ஆ.பிரதீபன், மத்திய வங்கி பிரதேச முகாமையாளர் க.பிரபாகரன்,இலங்கை வங்கி கிழக்கு மாகாண சந்தைப்படுத்தல் முகாமையாளர் ந.து.ரகுராம், கிண்ணியா இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் திருமதி ரம்மியா,கிண்ணியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமிந்த பெர்ணாண்டோ,ஏனைய கிண்ணியா கிளை வங்கி முகாமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.